# சங்கமயுகம்

மலர்: 29 ஆகஸ்ட்-செப்டம்பர் 2015 இதழ்: 3 இருமாத இதழ்: ரூ. 8.00




**சென்னை (ஹேப்பி வில்லேஜ்):** போக்குவரத்து துறை தேசீய மாநாட்டு நிகழ்ச்சி மேடையில்: பி.கு. சுந்தரேசன் பி.கு. சுரேஷ் (மதுபன்) தலைமையக ஒருங்கிணைப்பாளர், போக்குவரத்து மற்றும் பயணத்துறை பி.கு. பீனா, திரு. N.K. குமார், IES போக்குவரத்து திட்டம், சென்னை மேட்ரோ ரயில் , பி.கு. திவ்யா பெகன்ஜி, (மும்பை), தேசீய ஒருங்கிணைப்பாளர், போக்குவரத்துதுறை மற்றும் பயணத்துறை, திரு. ஹர்சஹாய் மீனா, ஆய்வாளர், தமிழ்நாடு சுற்றுலா துறை, பி.கு. கலாவதிஜி, திருமதி ஆனந்தி, M.D அடையார் ஆனந்தபவன் குரூப் மற்றும் உரையாற்றுபவர் பி.கு. கிரீஷ், (மும்பை)



**சென்னை (ஹேப்பி வில்லேஜ்):** போக்குவரத்து துறை தேசீய மாநாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முக்கிய விருந்தினர்கள்.



**சென்னை:** தமிழக ஆளுநர் மேதகு Dr. K. ரோசையா அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு. கலாவதி, உடன் பி.கு. பீனா, பி.கு. பார்வதி



**புதுச்சேரி:** Lt. General ஆளுநர் மேதகு அஜய்குமார் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. கவிதா



**திருவனந்தபுரம்:** கேரள ஆளுநர் மேதகு பி. சதாசிவம் அவர்களுக்கு ராக்கி அணிப்பவர் பி.கு. ராதா (!சென்னை) உடன் பி.கு. மினி, பி.கு. ஷைனி



**கேரளா:** கேரளா மாண்புமிகு முதலமைச்சர் உம்மன்சாண்டி அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு. உஷா, அடூர்



**சென்னை (ஹேப்பிவில்லேஜ்):** ஆகஸ்ட் 15 சுதந்திர தினவிழாவில் தேசீய கொடி ஏற்றி விளக்கம் அளிக்கின்றார் பி.கு. திவ்யாஜி, மும்பை உடன் மூத்த சகோதர சகோதரிகள்.




**சென்னை (அண்ணாநகர்):** வட இந்தியர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மேடையில் பி.கு. நீலிமா, பி.கு. திவ்யாஜி, பி.கு. குந்திபெகன்



**சென்னை (ஹேப்பி வில்லேஜ்):** ஊரக வளர்ச்சி பேரணிக்கான பயிற்சி முகாம் துவக்க விழாவில் குத்துவிளக்கு ஏற்றுபவர்கள்: பி.கு. லட்சுமி, (ஹான்சி). ஹைதராபாத், பி.கு. சுனிதா, பி.கு. சுமந்த் (மதுபன்) பி.கு. பீனா, பி.கு. கலாவதிஜி, டாக்டர் கிருஷ்ணராஜ், Joint Director of Health பி.கு. மதன், பி.கு. பாண்டியன்




**சென்னை (ஹேப்பி வில்லேஜ்):** போக்குவரத்து துறை மற்றும் பயணத்துறைக்கான வருடாந்திர தேசீய கூட்டத்தில் கலந்து கொண்ட அகில இந்திய உறுப்பினர்கள்

தலையங்கம்

# சுதந்திரம் அடைந்து விட்டோம். சுய இராஜ்ய அதிகாரி ஆக வேண்டும்.

இந்தியா சுதந்திர நாடு. வளரும் நாடுகளிலும் ஒன்றாக இருக்கும் நாடு. எனினும் உலகில் ஒரு பெருமைக்குரிய ஆற்றல் மிக்க முன்னோடி நாடாக ஆகிவிட வேண்டும் என்ற கனவுகளோடு செயல் பட்டுக் கொண்டிருக் கிறோம். பெற்ற சுதந்திரத்தின் பெருமை காக்க வேண்டும் என்ற நாட்டுப்பற்றுடன் ஆண்டு தோறும் நினைவு கூர்ந்து விழாக் கொண்டாடியும் மகிழ்கிறோம். அதே சமயம் கடந்து வந்த காலத்தின் சுவடுகள் முற்றிலுமாக இன்னும் மறைந்து விடவில்லை. ஆதலால் நம்மால் மறக்கவும் முடியவில்லை. ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அந்நிய ஆதிக்கத்தின் கீழ் சொல்லொணாத் துயரங்களைச் சகித்துக் கொண்டு அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்தோம். கண்களில் நீர் மல்க காத்திருந்த அந்த நாளும் வந்தது. பொறுத்தது போதும் என்று பொங்கி எழுந்தோம். அடிமை விலங்கினை அறுத்தெரியும் உறுதி பூண்டு எண்ணற்ற உயிர்களைத் தியாகம் செய்யவும் தயங்கவில்லை. வெஞ்சிறையிலே செத்து மடிந்தோம். எல்லாவற்றையும் எந்த ஒரு எதிர்பார்ப்புமின்றி துணிவுடன் காலடி எடுத்து வைத்தோம். வாழ்ந்த குடும்பம், செய்து வந்த தொழில், உடன் பிறந்தோர், உற்றார் உறவினர் யாரும் நினைவில் இல்லை. விடுதலை ஒன்றே உயிர் மூச்சாகக் கொண்டு சுதந்திரம் பெற்றோம். ஓங்கி உயர்ந்ததோர் கம்பம், அதன் உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே, பட்டொளி வீசிப் பறக்கும் எம் தாயின் மணிக்கொடி பாரீர் என்று பாடி மகிழ்ந்தோம். மகிழ்ச்சி பொங்கியெழ சிறகின்றியே வானில் பறந்தோம்..... ஆனால்....

## சங்கமயுகம்


## பொருளடக்கம்

மலர்: 28 ஆகஸ்ட் செப்டம்பர் 2014 இதழ்: 3

1. தலையங்கம் 01
2. பகவான் வாக்கு 04
3. அறியாமையின் கொடுமை 05
4. கேள்வி-பதில் (தாஜியுடன்) 08
5. புத்தியை அர்ப்பணித்தல் 10
6. ஆசீர்வாதம், அழிவற்ற செல்வம் 11
7. ஜீவகாருண்யம் (சிறுகதை) 19
8. மறதி விளையாட்டு 21
9. அணு ஆயுதங்களின் அவசியம்... 23
10. மலரும் நினைவுகள் 25
11. சுட்டி படுசுட்டி 29
12. நாடகத்தின் மறுபக்கம்.... 32

இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும். ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**



என்ன? இத்தனை கொடுமைகளையும், அடக்கு முறைகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் வெள்ளை யனுக்கு வெஞ்சாமறை வீசிப் பரவசப்பட்டவர் களுக்கும் பஞ்சமிருக்கவில்லை என்பதை எப்படி மறக்க முடியும் !

சுதந்திரம் வேண்டும் என்றோம். எதற்காக? நாடு விடுதலை அடைந்து விட்டால் இழந்து விட்ட உரிமைகள், இழந்து விட்ட அமைதி, இழந்து விட்ட சொத்து சுகங்கள் அனைத்தும் நமதாகிவிடும். ஏழ்மை நீங்கிப் போகும். வேற்றுமை நீங்கி ஒற்றுமையோடு, நல்லிணக்கத்துடன் இன்புற்று வாழ்வோம். பாரதம் ஒப்பற்ற சமுதாயமாக மலர்ந்து விடும். அண்ணல் காந்தியடிகளும், நாம் எல்லோருமே எதிர்பார்த்தது போல நாடு இராம இராஜ்ய மாகிவிடும் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். செய்த தியாகங்களெல்லாம் பொது நலனுக்காகவே செய்தோம். ஆனால் எந்த லட்சியங்களுக்காகத் தியாகம் செய்தோமோ, அதிலிருந்து விலகிப் போனோம். சிறிது, இன்றைய நிலையை ஒப்பிட்டுப்பார்க்கும் போது மனம் சோர்ந்து போகிறது. காரணம் ! இன்று சுதந்திரம் உண்டு. ஆனால் சுய இராஜ்யம் இல்லை. சுய இராஜ்யம் இல்லாததால் இராம இராஜ்யமும் இல்லை.

எப்போது எல்லோரிடமும் சத்தியம், அஹிம்சை, நேர்மை, தூய்மை அன்பு இருக்குமோ, அதுதான் இராம இராஜ்யம். எங்கே ஒரு தர்மம், ஒரு குலம், ஒரு மொழி, ஒரு இராஜ்ய பரிபாலனம் இருக்குமோ, அதுதான் இராம இராஜ்யம். சுய இராஜ்யம் என்பது மாற்றானுக்கு அடிமையாயிருக்கும் நிலை மாறுவது மட்டுமல்ல, ஒவ்வொருவருக் குள்ளிருக்கும் தீய சக்திகளுக்கு அடிமையா யிருக்கும் நிலையும் மாற வேண்டும். அதாவது கர்மேந்திரியங்கள் தன் வசத்திலிருக்கும் ஞானமும், சக்தியும் கூடிய அதிகாரம் அவசியம். இந்த அதிகாரம் அடையும் வரையிலும் நமக்கு பூரண சுதந்திரமில்லை.

உலகில் இன்று அநேக தர்மங்கள் உள்ளன. என்றாலும் மனிதனிடம் ஆத்மீக பலம் இல்லை. மனிதன் செய்கின்ற கர்மங்களில் தர்மத்தின் சக்தி வெளிப்படவில்லை. தர்மத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் அடைந்திருக்க வேண்டிய அமைதி, சுகம் மற்றும் தூய்மையின் அனுபவம் இல்லை. மாறாக அதர்மமே மேலோங்கி இருக்கின்றது. ஆகையால் இப்போது நம்மிடம் உள்ள நம்பிக்கை பற்றிய கண்ணோட்டத்தில் மாற்றம் அவசியம் என்பது புலனாகிறது. உண்மையில் எல்லோருமே மனிதப் போர்வையில் இருக்கும் ஆத்மாக்களேயாவர். ஆதலால் எல்லோருடைய தர்மமும் ஆத்மாவைச் சார்ந்த ஒன்றாகவே இருக்க வேண்டும். அதாவது நமக்குச் சொந்த மான தூய்மை மற்றும் அமைதி எனும் சக்திகள். இது ஆத்ம தர்மமாகும். ஆனால் இன்று ஆத்மாவானது பஞ்சவிகாரங்களின் பிடியில் இருக்கின்ற காரணத்தால் தர்மம் என்பது வாழ்க்கை நடைமுறையிலிருந்து விலகிச் சென்று விட்டது என்றாலும் இன்றைய இந்த நிலை மாற வேண்டிய தருணம் இப்போது வந்திருக்கின்றது. நாடகப்படி இப்போது ஒவ்வொருவருக்கும் பஞ்ச விகாரங்களின் பிடியிலிருந்து விடுதலை பெறும், போராட்டம் இன்றியமையாத ஒன்றாக ஆகிவிட்டது.

இந்தப் போராட்டத்தில் வெறுப்பு இல்லை, பகைமை இல்லை, ஆரவாரம் இல்லை. இதில் புஜபலமோ, ஆயுதபலமோ அவசியமில்லை. இது அதி சூட்சுமமானது. சாத்வீகமானது. ஏனெனில் இதில் எதிரிகளும் சூட்சுமம், உபயோகிக்கும் ஆயுதங்களும் சூட்சுமம், அதாவது ஞானம் மற்றும் யோக சக்தியின் மூலம், மனோ விகாரங்களின் மீது போர் தொடுத்து வெற்றி கொள்வதற்கான யுத்தம் ஆகும். இதன் மூலம் பாரத தேசத்து மக்களும் இந்த மக்கள் மூலமாக உலக மக்களும்

விடுவிக்கப்பட வேண்டும். இதை நாம் தான் செய்ய வேண்டும். ஆகையால் இது பாரத யுத்தம் எனலாம். இது தர்ம யுத்தம் - இது கட்டாயமாக நடக்கத்தான் வேண்டும். இதன் உண்மை தாத்பரியத்தை உள்ளது உள்ளபடி புரிந்து கொள்ள வேண்டிய நேரமும் வந்து விட்டது. இது எல்லாம் வல்ல, பரம தந்தை, பரமாத்மாவின் உபதேசம் மற்றும் அன்புக் கட்டளையுமாகும். இதன் பலனாக, அதர்மம் அடியோடு அழியும். தர்மம் தளைக்கும். தார்மீகம் உயிரோட்டம் பெறும். சுகம் தரும் பொற்காலம் மலரும். ஸ்ரீ லட்சுமி - ஸ்ரீ நாராயணரின் தெய்வீக ஆளுமையின் கீழ், பாரதம் மீண்டும் சொர்க்க பூமி ஆகிவிடும்.

**பகவான் வாக்கு:** இனிமையான குழந்தைகளே! இன்று உலகம் முழுவதுமே யுத்த மைதானமாகவே காட்சியளிக்கிறது. இதில் மூன்று விதமான சேனைகள் அணிவகுத்து நிற்கின்றன. ஒன்று எது நியாயம், எது அநியாயம் என்பதைத் தீர்மானிக்கும் திறமை யற்ற தேகாபிமானிகளான கௌரவ சேனை. இரண்டாவது அழிப்பதற்கென்றே ஆயுதங்களைத் தயாராக வைத்திருக்கின்ற அரசியல் வாதிகளும், விஞ்ஞானிகளும் அடங்கிய யாதவ சேனை. மூன்றாவது அஹிம்சையும் ஆன்மீக உணர்வும், சுயதர்மத்தின்பால் அன்பும் கொண்டுள்ள பாண்டவ சேனை, பாண்டவர்கள் என்னைச் சார்ந்திருக்கின்றார்கள். இவர்கள் என்னையே நினைந்து, என்னிடமிருந்து பெறுகின்ற சக்தியின் மூலமாக உலக மாற்றத்திற்கு மறைமுக மாகப் போராடிக் கொண்டிருப்பவர்கள். இந்தப் பாண்டவ சேனையில் என்னோடு சம்மந்தம் கொண்டிருக்கின்ற குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் இருக்கின்றீர்கள். உங்களோடு சேர விரும்புகின்ற மற்றவர்களும் அணி சேரட்டும்.

குழந்தைகளே! சுதந்திரமும், சுய இராஜ்ய அதிகாரமும் உங்களுடைய பிறப்புரிமை. இதை யாசித்துப் பெற முடியாது. உறுதியுடன் போராடித் தான் பெற வேண்டும். ஒருவருக்காக, இன்னொருவர் இதைச் செய்ய முடியாது. உங்கள் சுதந்திரத்தை நீங்கள் தான் பெற முடியும். இதற்கு உரிய தருணம் இப்போதுதான். ஆதலால் தர்ம யுத்தம் தொடங்கட்டும். இடையில் வரும் தடங்கல்களும், தோல்வியும் பொய்த் தோற்றமே, அஞ்சுவதற்கொன்றுமில்லை. உங்களுடைய வெற்றி நிச்சயிக்கப்பட்டு விட்ட ஒன்று. தர்மம் தளைக்க தர்ம யுத்தம் நடக்கட்டும். நடக்கத்தான் வேண்டும்.

வாழ்க்கை ஒரு நெடிய பயணம். இதற்கு பாதுகாப்பான அச்சாணி போன்று இருப்பது ஆன்மீக ஒழுக்கம். இதை முழுமையாகப் பின்பற்றி வாழ்ந்த காலம் ஒன்றிருந்தது என்பதை முதலில் நம்ப வேண்டும். அப்போது தான் இது நம்மிடமிருந்து எதனால், எப்பொழுது விலகிப் போயிற்றென்பதைப் பற்றியும், மீண்டும் கொண்டு வர என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றியும் சிந்திக்க முடியும்.

அதர்மத்தை வெல்லும் முயற்சியில் இடையில் அதற்காக பலியாவது தர்மமாகுமா? ஆதலால் தான், ஏற்றுக் கொண்ட உயர் லட்சியத்தை நிரந்தரமாகப் பேணிக் காப்பதில் உற்சாகமாக இருப்பதன் மூலம், மற்றவருக்கும் ஊக்கமளிப்பது மிகவும் அவசியமாகிறது. களைப்படைந்து விட்ட இன்றைய சமுதாயத்திற்காக நாம் செய்ய வேண்டிய சமூக சேவையும் இது தான்.




இனிமையான குழந்தைகளே!

நீங்கள் நினைவு என்னும் பயணத்தில் ஒருபோதும் களைப்படைந்து விடாதீர்கள். சில குழந்தைகள், தனக்கு சிவபாபாவிடமிருந்து நேராகவே பிரேரணை கிடைக்கிறது என்ற எண்ணம் உடையவர்களாக இருக்கின்றனர். இது தவறானது, பிரம்மா மூலமாகவே தான் சிவபாபா குழந்தைகளுக்கு அறிவுரை வழங்குகின்றார். சிவபாபாவும் கூறுகின்றார். மன்மனாபவ! பிரம்மாவும் கூறுகின்றார் மன்மனாபவ! பிரம்மா குமார் குமாரிகளும் கூறுகின்றனர் மன்மனாபவ! இவ்வாறு அறிவுரை வழங்குவதற்கு வாய் அவசியமாகத் தேவைப்படுகிறதல்லவா ! நான் நிச்சயமாக உங்களுக்கு பிரம்மா மூலமாகவே அறிவுரை வழங்குகின்றேன். நீங்கள் நேராகவே என்னோடு தொடர்பு வைத்துக் கொள்ள முடியுமானால் இங்கு நான் ஏன் வர வேண்டும்? குழந்தைகளுக்கு இவ்வாறான எண்ணம் வருவதும் தடங்கல் (விக்னம்) ஆகும். இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு சிவபாபா அன்போடு எச்சரிக்கை செய்கின்றார். குழந்தைகளே ! படிப்பில் கவனம் செலுத்துங்கள். பிரம்மா மூலமாகவே கற்பிக்கின்றேன். தன்னை ஒரு ஆத்மா என உணாந்து என்னை நினைவு செய்யுங்கள். அப்போது தான் தேகாபிமானம் விலகும். தேகாபிமானம் ஒரு பெரும் நோய். ஆதலால் ஆத்ம அபிமானி ஆவதற்கு பெரும் முயற்சி அவசியம். ஸ்ரீமத்படி நடப்பதும் அவசியம். ஆக்ஞைப்படி நடக்கும், குழந்தைகளே எனக்குப் பிரியமானவர்கள்.

# அறியாமையின் கொடுமை



இன்று மனிதன் மதுவுக்கும், போதை மருந்துக்கும் அடிமை. இது கேடு விளைவிக்கும் என்று தெரிந்தும், இதற்கு இத்தனை பேர் அடிமைப்பட்டுக்கிடக்க சம்மதிக்கிறார்கள் என்றால், இதை அறியாமையின் கொடுமை என்று தான் சொல்ல வேண்டும். நம் நாடு அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த போது, வறுமையில் வாடிக்கிடந்த மக்களிடமிருந்து வரி வசூல் செய்ய முடியாமல் போன வெள்ளையர் கள், கிராமங்கள் தோறும் கள்ளுக் கடைகளைத் திறக்க அனுமதித்து, பணத்தை மறைமுகமாக மக்களிடமிருந்து பறித்துக் கொண்டிருந்தார்கள். நாம் என்ன செய்தோம் காத்திருந்து, பொறுத் திருந்து, வெள்ளையன் சூழ்ச்சி செய்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டோம். எல்லோரும் சேர்ந்து வெள்ளையனை வெளியேற்றிவிட்டோம்.

ஆனால், இப்போதோ, செங்கோல் நமது கையில், இப்போது நாம் என்ன செய்கிறோம்? அன்று ஒரு சிலரிடமிருந்த குடிப்பழக்கம் பரவலாகி விட்டதன் மூலம் சிரமப்பட வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியிருக்கிறோம் பராமரிப்புக்குப் பணம் தேவை தான். ஆனால் இதற்கு நன்மை செய்யும் சக்தி கிடையாது. பிரச்சனைகள் தான் வளரும். அதைத்தான் இன்று அனுபவம் செய்கிறோம். பத்திரிகை வாயிலாக நாம் அறிகின்ற செய்திகள் நமக்கு நிம்மதியைத் தருவதாக இல்லை. போதை மருந்துக்கு அடிமையாயிருப்பவர்கள், உயிர்க் கொல்லி நோயான எயிட்ஸ்க்கு உயர்ந்த பட்ச காரணமாயிருக்கிறார்கள் என்றும் போதைப் பழக்கமும், எயிட்ஸ் நோயும் தொற்று நோய் போல் பரவும் அபாயம் உள்ளது என்றும் அதன் காரணமாக குறைந்த வயதிலேயே இறப்பு நேரிடுகிறது என்றும் கூறுகின்றனர். இதில் நம் நாடும் குறைந்ததல்ல. இன்றைக்கு குற்றங்கள் பெருகிக் கொண்டே இருப்பதும், சட்டங்கள் மீறப்படுவதும், கொலை, கொள்ளை, கடத்தல், கலப்படம் என்று சமூக விரோதச் செயல்கள் தாராளமாக நடப்பதும், கட்டுக்கடங்காமல் இருப்பதும் ஏன்? புத்திகெட்டுப்போன நிலையில் மனிதன் வேகமாக சுய நினைவை இழந்து கொண்டேயிருக்கிறான் என்பது தான். சட்டங்கள் ஓரளவுக்குத்தான் உதவ முடியும். அறிவொளி இயக்கம் மூலம் எல்லோருக்கும் கல்வி எனும் நற்பணி நடந்து கொண்டிருந்தாலும், இதனை மேலும் விரிவடையச் செய்ய முடியுமா என்பது தெரியவில்லை. ஏனெனில் இன்றைய கல்வி முறையில் பொது அறிவு வளர்ச்சிக்கான அம்சங்கள் அதிகமாகவும், சுய அறிவு வளர்வதற்கான அம்சங்கள் மிகக் குறைவாகவும் இருப்பதே நம் அனுபவமாக இருக்கின்றது.

மேலும் கொடுமை என்னவென்றால், படித்தவர்களில் ஒரு சிலரும் தவறு செய்கிறார் கள் என்பதே இன்றைய நிலை. இதில் விதி விலக்கு நிச்சயமாக உண்டு. படித்தவர்களில் சாதுரியமாக தவறு செய்பவர்களாக இருக்கிறார் கள் என்பது நல்லதல்ல. ஏனெனில் நேர்வழியில் கடமைகளைச் செய்ய வேண்டும். ஆக்க பூர்வ மாகச் செயல்பட வேண்டும் என்ற உணர்வுகள் புத்தியில் மந்தப்பட்டுக்கிடக்கின்றன என்றே எண்ண வேண்டியதாயிருக்கின்றது. ஆதலால் சுய உணர்வை விழிப்படையச் செய்ய வேண்டிய உதவி அவசியமாக இருக்கிறது. இதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும். இதை நிறைவேற்றவும் வேண்டும். குறிப்பாக இதனைச் செய்யாமல் நாம் எத்தனை

நல்ல திட்டப்பணிகளை மேற்கொண்டாலும், நாம் விரும்புகின்ற சமுதாய அமைப்பைக் காண்ப தென்பது சாத்தியமில்லை.

## உண்மையான ஆரோக்கியம்

உடல், மனம், சமூக நலன் என்ற இந்த மூன்று வகையிலும் ஆரோக்கியமுள்ளவனாக இருக்கின்ற மனிதனே ஆரோக்கியமுள்ளவன். இன்றைய நிலவரப்படி உலகளவில் ஆரோக்கிய மாயிருப்பவர் ஒருவர் கூட இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் கூறுவதாக செய்தி களைப் பார்க்கின்றோம். பொதுவாக பெரும்பாலும் நாம் உடல் பராமரிப்புக்கே முக்கியத்துவம் கொடுப்பதாகவும், மன ஆரோக்கியத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை எனவும் அறிக்கை கூறுகின்றது. ஆரோக்கியம் என்பதில் மனதிற்கு முக்கிய பங்கு உள்ளது. ஆதலால் இதை அலட்சியப்படுத்தக் கூடாது. உடல் பயிற்சி மூலமான, உடல் பராமரிப்பு உண்மையான ஆரோக்கியமாகாது, மாறாக, உணர்ச்சி வசப்படா திருத்தல், எல்லோருடனும் இணக்கமுள்ள உறவு அமைதியுடன் கூடிய நல்ல அணுகுமுறை, சமூக நலனில் அக்கறை என்பதில் மனம் பக்குவம் அடைந்திருத்தலே உண்மையான ஆரோக்கியம் ஆகும். எந்த ஒரு சூழ்நிலையிலும், மனம் பாதிப்படையாமல், சமநிலை உடையவனாக இருக்கின்றானோ, அவனே உண்மையான ஆரோக்கியமுள்ளவன்.

## இதற்கு என்ன செய்யலாம்?

பெரும்பாலும் மனம் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கும் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், மனம் பாதிப்புக்குள்ளாகாமலிருக்க பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கின்றனர் இது, மனதில் பாதிப்பை உண்டாக்கும் சக்திக்கு எதிர்ப்பு சக்தி என்றும் கூறுகின்றனர். இத்தகைய எதிர்ப்பு சக்தியை எல்லோரும் வளர்த்துக் கொள்ளக் கூடிய வழி வகைகள் உண்டா? மனம் பாதிப்புக்குள்ளாவதுதான் மது மற்றும் போதை மருந்தை நாடுவதற்கான காரணம் என்றும் கூறுகின்றார்கள். அப்படியானால், நிவாரணத்திற் கான பரிந்துரைகள் என்ன என்று பார்க்கலாம்.

1. வாழ்க்கைக்கு முக்கியமாக இருக்கின்ற உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

2. தன் தவறுகளை உணர்ந்து, அதைத் திருத்திக் கொள்வதில் உறுதியாக இருக்க வேண்டும்.

3. வாழ்க்கையின் இலட்சியத்தை அடைவதில் நேர்மையோடும், மனம் தளராமலும் முயற்சி செய்ய வேண்டும்.

4. சமூக நலன் மற்றும் குடும்ப நலனைக் காப்பதில் பொறுப்பேற்றுக் கொள்வதோடு, ஆரோக்கியமற்ற பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும்.

இதெல்லாம் நடைமுறைப்படுத்துவதெப்படி என்ற கேள்விக்கு இடமில்லை. எனக்கு நானே பொறுப்பு என்ற உணர்வு அவசியம். ஆன்மீக ரீதியாகப் பார்த்தோமேயானால், சுய முன்னேற்றம் காண்பதன் மூலம், மன ஆரோக்கியத்திற்கு மேலே கூறப்பட்ட நான்கு விதமான பலன்களும் இயல்பாகவே நிறைவேறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. ஏனெனில், ஆன்மீக ரீதியாகத் தன்னைப் பற்றி உணர்ந்து கொள்கின்ற ஒருவன், தன்னை தான் இருக்கின்ற இந்த உடலினின்றும் தனிப்பட்ட, அழிவற்ற ஒரு ஆத்மா என்று புரிந்து கொண்டவனாக இருக்கின்றான். இத்தகைய விழிப்புணர்வின் மூலம் பெறுகின்ற ஆழமான அமைதியானது, இதன் தொடர்ச்சியான அன்பு, ஆனந்தம் போன்ற அவசியமான சக்திகளை அளிப்பதன் காரணமாக மன உளைச்சளிலிருந்தும், ஆரோக்கிய மற்ற பழக்க வழக்கங்களிலிருந்தும் விலகி யிருக்க உதவுகிறது. இந்த ஆன்மீக முன்னேற்றத்திற்கு இராஜயோக கல்வி உதவுகிறது. இக்கல்வி கற்பிக்கின்ற தியானத்தின் மூலம், தவறான வழியில் தூண்டப்படுகின்ற

உணர்வுகள் சாந்தப்படுகின்றன. ஏனெனில் இந்த தியானத்தில், ஆன்மீக எண்ணங்களின் மூலமாக அதிமேலான சக்தியுடன் இணைந்து அதில் லயிக்கிறோம் சக்தியையும் பெறுகிறோம் என்பதுதான். இதன் மூலம் மனோ பலம் அதிகரிக்கும். இதன் பயனாக பலகாலமாக பயம், கோபம், துயரம் போன்ற பாதிப்புகளால் அதிருப்தி யுற்றிருக்கும் உணர்வுகள் அமைதி பெற்று திருப்தி யடைகின்றன.

காரணம் தியானம் செய்வதால், ஆத்மா தூய்மை அடைகிறது. அன்பு, அமைதி போன்ற உணர்வுகள் விழிப்படைகின்றன. தன்னம்பிக்கை உண்டாகிறது. இதனால், இதுவரை ஏதாவது கெட்ட பழக்க வழக்கங்கள் இருந்திருந்தால், இதைப்பற்றிய எண்ணங்கள் மாறிவிடுகின்றன. மனம் போன போக்கில் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் மாற்றம் உண்டாகிறது. நல்லொழுக்கம் நடைமுறையில் வருகிறது. பணவிரயம் தடுக்கப்படுகிறது. மனம் மகிழ்ச்சி நிறைந்ததாகி விடுகிறது. இவ்வாறு ஒருவர் நல்வழியில் நடக்கிறார் என்றால் இது அவருக்கு மட்டும் நன்மையல்ல. இதில் பிறர் நன்மையும் அடங்கும். இவ்வாறாக, இன்றைய மோசமான சூழ்நிலையில் நாம் நம்மைப்பற்றிய அறியாமையிலிருந்து விடுபடுவோமேயானால், நாம் எல்லாவித பிரச்சனைகளிலிருந்தும் விடுபட்டு விடுவோம்.



## மனதை துன்பத்தில் ஆழ்த்தும் வீணான எண்ணங்கள் உற்பத்தியாவதைத் தடுப்பதற்கான வழி

மனித மனங்களில் மிகவேகமாக வீணான எண்ணங்களும், எதிர்மறை எண்ணங்களும் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கின்றன. இவைகளால் மனிதனுக்கு ஏற்படுவது துக்கமேயன்றி, அமைதி இல்லை. நல்லெண்ணங்களே சுகம் தருபவை. இதன் காரணமாகவே துக்கம் தரக்கூடிய வீண் எண்ணங்களைத் தவிர்க்கும் வழியை அனைவருமே நாடுகின்றனர். இதற்காக ஜபம், தவம், யாகம் போன்றவைகளையும் செய்கின்றனர் என்றாலும் இதற்கு மிகச்சரியான வழி உண்டு.

மனித மனங்களில் பலவிதமான எண்ணங்கள் ஓயாது அலை பாய்ந்து கொண்டே இருக்கின்றது. இதன் காரணமாகவே எது சரி, எது நியாயம், எப்படி செய்வது போன்ற குழப்பத்தில் சரியாகத் தீர்மானிக்க முடியாமல் தவறுகள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. ஆதலால் மனதைக்கட்டுப்படுத்தி நேர்வழியில் நடத்திச் செல்கின்ற சக்தி இன்றியமையாததாகிறது. இதற்கு இந்த ஒரு வழி தான் உண்டு. ஒரே ஒரு பரம்பொருளின் அன்பு நினைவில் ஆழ்ந்து மூழ்கி விடும்போது எண்ணங்களில் வேகம் ஓய்ந்து விடுகிறது. எண்ணங்களை சீர்தூக்கிப் பார்ப்பதற்கான வாய்ப்பு புத்திக்குக் கிடைத்து விடுகிறது. சீரான எண்ணங்கள் நேர்வழியில் நடத்தப்படுகின்றன. வீண் எண்ணங்கள் எழுவதில்லை. அப்போது மன நிலையானது ஆனந்தமயமாய் விளங்குகிறது. எப்படி இறைவன் என்பவர் ஒரே ஒருவரோ, வாழ்க்கையின் லக்ஷியம் எப்படி உன்னதமான ஒன்றோ, காலச்சக்கரத்தில் பரமாத்மாவின் திவ்ய அவதார நேரமும் ஒன்றோ, அவ்வாறே மனதில் உற்பத்தியாகும் வீண் எண்ணங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒரே ஒரு சரியான வழி தான் உண்டு. அது பரம்பொருள் பரமபிதா பரமாத்மாவின் அன்பு நிறைந்த ஞானபூர்வ நினைவில் மூழ்கித் திளைப்பது.



# மலரும் நினைவுகள்

**பிரம்மா குமாரிகள் இயக்கத்தின் முன்னாள் தலைவியும், தலைமை நிர்வாகியாகவும் இருந்த தாதி பிரகாஷ்மணிஜி அவர்களுடனான சந்திப்பின் போது அறிந்த விவரங்கள்**

**கேள்வி: தாதிஜி ! முற்றிலும் பெண்களே நிர்வகித்து வரும் உங்கள் இயக்கத்தின் ஒற்றுமைக்கு காரணம் என்ன?**

**தாதிஜியின் பதில்:** இன்றைய உலகில் வேற்றுமை அதிகமாக இருப்பதற்கான காரணம் அகங்காரம். இதனால் சண்டை சச்சரவுகளும், பிரச்சனைகளுமே அதிகரித்துக் கொண்டிருக் கின்றன. இவ்வாறான பிரச்சனைகளால் துன்பமும், துயரமும் அதிகரிக்கும்போது இறைவன் அவதரிக்கின்றார். அவசியமான ஆன்மீகக் கல்வியையும் கற்பிக்கின்றார். இதில் சாதி, சமய, இன வேறுபாடுகளைக் களைந்து விட்டு, ஒற்றுமையாக வாழ்வதற்கான கலை கற்றுத்தரப்படுகிறது. இது இராஜயோக தியானத்தின் முக்கிய அம்சமாகும். உலகிலுள்ள அனைத்துப் பிரிவினரும் இறைவனுடைய குழந்தைகளேயாவர். இறைவன் தன் குழந்தை களுக்கு சிரேஷ்டமான எண்ணம், சொல் மற்றும் செயல் முலம் சிரேஷ்டமான கர்மங்களைச் செய்து எல்லோரும் தூய்மை, அன்பு தெய்வீகம் மற்றும் சகோதரத்துவத்துடன் வாழுகின்ற சொர்க்கத்தை இவ்வுலகில் ஸ்தாபிக்க வேண்டு மென்பதாகும். மேலும் ஒவ்வொருவரும் தங்களுடைய தனிப்பட்ட மானம், மரியாதை, பதவி போன்ற அகங்காரத்தின் சாயல்களை மனதிலிருந்தே விலக்கிவிட வேண்டும். அனைவரது உள்ளத்திலும் நாம் இறைவனின் குழந்தைகள் ஆதலால் சகோதரர்களே என்பதும், எம் கடன் பணி செய்து கிடப்பதே என்கிற பாவனை மேலோங்கி இருப்பதாலும் வேற்றுமை என்பது இல்லாமலிருக்கிறது.

**கேள்வி: தாதிஜி! சுபாவம், சம்ஸ்காரம், நடையுடை பாவனை என்பது ஒவ்வொருவரிடமும் வித்தியாசமாக இருக்கும் போது ஒற்றுமை என்பது எவ்வாறு இருக்க முடியும்?**

**பதில்:** தற்காலத்தில் இன்றைய சமுதாயத்தில் பூதாகரமாக ஆகியிருக்கின்ற ஒற்றுமையின்மை சம்மந்தப்பட்ட சரியான கேள்வி இதுவாகும். யார் நம்மை நிந்தனை செய்கிறாரோ அவர் நமது நண்பர். பரமாத்மாவாகிய சிவதந்தையின் அறிவுரை, அனைவருமே உங்கள் நண்பர்கள். விரோதி என்று எவருமில்லை. பெரியவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும். சிறியவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். இதுவே நமது ஒற்றுமையின் வெற்றிக்குக் காரணம்.

சுபாவம், சம்ஸ்காரம் மற்றும் சிந்தனையில் அனைவருமே வேறுபட்டிருக்கலாம். ஆனால் நாங்கள் இறைவழி (ஸ்ரீமத்) என்னும் ஒரே வழியில் உள்ள பூர்வமாக ஈடுபட்டுக் கொண்டி ருக்கிறோம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒத்துப்போகும் சக்தியைப் பிரயோ கித்து ஆன்மீக அன்புடன் செயல்படுவதும் இதற்குக் காரணம்.

**கேள்வி: தாதிஜி! உங்கள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர்கள் அனைவருமே ஒரே வழிப்படி ஒற்றுமையாக இருக்கிறார்களா?**

**பதில்:** இங்கு இருப்போர் எல்லோருமே நிச்சயமாக ஒரே வழிப்படி நடப்பவர்கள் தான்.

ஆனால் இல்லறத்தில் இருந்து கொண்டு இந்த இயக்கத்தைப் பின்பற்றுபவர்களிடம் எப்படி ஒற்றுமை இருக்க முடியும் என்று நினைக் கிறீர்கள். அப்படியில்லை. அவர்களும் கூட இந்த இயக்கத்துடன் ஒற்றுமை உணர்வுட னிருந்து தான் இப்பணியில் பங்கேற்கின்றனர். பகவானுடைய முதல் அறிவுரையே நீங்கள் துய்மை, அமைதி மற்றும் அன்புடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பது தான். இந்த விதியின் படி உறுதியாக இருப்பவர்களால் நிச்சயமாக ஒற்றுமையுடன் இருக்க முடிகிறது. அதலால் இங்கு வேற்றுமை உணர்வு உண்டாவதற்கு வழியில்லை.

**கேள்வி: தாதிஜி! நீங்கள் மிகப்பெரிய அளவில் மாநாடுகள், விழாக்கள் நடத்துகிறீர்கள். இதற்கு முக்கியமான காரணம் என்ன?**

**பதில்:** உலகம் இன்று அழிவின் வாயிலில் நின்று கொண்டிருக்கிறது. விகாரங்கள் எனும் அக்னி கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக் கிறது. நாலாபுறமும் துக்கம், அசாந்தி பரவிக் கொண்டேயிருக்கிறது. இதனால் மனித குலமே பாதுகாப்பின்றி, பயந்து வாழ்ந்து கொண்டிருக் கின்றனர். பரமபிதா பரமாத்மா இவ்வுலகில் அமைதியைக் கொண்டு வருவதற்கான காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றார். நாம் அனைவரின் எதிர்பார்ப்பும், நோக்கமும் அது தான். ஆதலால் நாங்களும், பரமாத்மாவின் வழிப்படி நடந்து எமது யோக சக்தியின் அதாரத்தில் உலகில் அமைதியைக் கொண்டு வருவோம். இதற்கான அந்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதற்காக பரமாத்மா அவதாரம் செய்திருக்கின்றார் என்ற செய்தியை உலகம் முழுவதும் பரப்பிக் கொண்டிருக்கிறோம். இன்னும் வெகு விரைவிலேயே துக்கம், அசாந்தியாகிய மேகக் கூட்டங்கள் கலைந்து விடும். அதன் பிறகு சுகம், அமைதி மற்றும் செழிப்பு மிக்க உலகம் ஸ்தாபனையாகும். இதற்காகத்தான் நாங்கள் எங்கள் மனம், சொல், செயல் மற்றும் செல்வம் சகிதமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். எனவே தான் பெரும், பெரும் திட்டங்கள் நிகழ்ச்சிகள் போன்றவைகளை நடத்துகிறோம். இதன் முலமாக அநேகர் வாழ்க்கையில் சுகம், சாந்தியை அனுபவம் செய்து சிரேஷ்டமடைகிறார்கள்.

## சிவபாபா நீ கிடைத்த பிறகு....

பி.கு. புருஷோத்தமன், பூந்தமல்லி, சென்னை

கனப் பொழுதும் இதயம்
காணாத மகிழ்ச்சியை
பலயுகம் தாண்டி வர நீட்டித்தந்தாய்

பாலை வனமே கண்ட இதயத்தில்
பாலாற்றை பெருக்கெடுத்து பாய வைத்தாய்
வரண்ட பூமியாய் நின்ற நிலத்தில்
மகிழ்ச்சி நதியை அனுப்பி வைத்தாய்

ரணம் கண்ட என் இதயத்தை
வருட உன் அன்பை
மயிலிறகாய் தருவித்தாய்

மலையாய் குவிந்துவிட்ட பாவத்தை
உன் நினைவை தந்து
தரைமட்டமாய் தகர்த்து விட்டாய்

பாதையே இல்லாதவனுக்கு
பயண வழி காட்டி தந்தாய்
என் நாயகனே நான்
உயிரோடு இருக்கும் வரை
உன்னை நினைப்பதுவே அல்லாமல்

உயிரே போனாலும்
உன் நினைவு மறவேன்
நான் தடையின்றி நினைத்திருப்பேன்



# புத்தியை அர்ப்பணித்தல்

அர்ப்பணம் செய்யுங்கள் என்று சொன்னால், எனக்கு எது தேவைப்படாதோ, எது பொய்யானவையோ, அவற்றை அர்ப்பணித்து விடுதலாகும். ஆத்மாவாகிய எனக்குள்ளே, பழைய பழக்க வழக்கங்கள், பழைய சம்ஸ்காரம் போன்ற விரோதிகள் உள்ளனர். இவ்விரோதி களை நான் அர்ப்பணித்துவிட வேண்டும். புத்தியை அர்ப்பணித்தல் என்பது, பாபா காட்டு கின்ற வழியைத் தவிர வேறு வழியில் புத்தி செல்வதற்கு அனுமதிக்கலாகாது. ஆத்மாவின் மூன்று சக்திகளில் புத்திதான் அதிகமாகத் தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே தான் புத்தியை அர்ப்பணித்து விட வேண்டும் என்பதாகும். அதாவது பாபாவின் கட்டளைப்படி ஆக்ஞாக்காரியாக, புத்தியை அந்த வழியில் கொண்டு வந்து விடுவதாகும். இதன் மூலம் புத்தி தங்க பாத்திரமாக ஆகிவிடுகிறது.

### புத்தி அர்ப்பணமாகியுள்ளதா என்பதைச் சோதிக்க மூன்று வழிகள்.

சிவபாபா பிரம்மா பாபாவின் உடலில் வந்து, பிரம்மா பாபா ஆத்மாவின் புத்தியைப் பயன்படுத்தித்தான் ஞானம் அருளினார். இந்த ஞானத்தில் எந்த விதமான கலப்படமும் நடந்து விடாமலிருக்க, பிரம்மா பாபா தனது புத்தியை எவ்விதமாக அர்ப்பணித்திருந்தார் என பார்ப்போம்.

1. பிரம்மா பாபா தனது புத்தியை மிக ஆழ்ந்த அமைதியில் இருக்கும் படியாகப் பழக்கப்படுத்தினார். இதற்கு என்ன வழி? சிவபாபாவை அவருடைய அமைதி இல்லத்தில் (சாந்திதாம்) நினைவு செய்தார்.

2. மனதை உணர்ச்சி வசப்படாமல் வைத்துக் கொள்வார். மனதில் அதிகமான எண்ணங்கள் உருவாகாமலும், புத்தியானது அதில் ஈடுபட்டு விடாமலும் பார்த்துக் கொண்டார். மேலும் அமைதியாகவும், சாந்தமாகவும் இருக்கும்படி செய்தார்.

3. சிவபாபா என்ன விரும்புகின்றார்? என்ன ஞானம் அருளுகின்றார் என்பதைச் சரி வரப்புரிந்து கொள்ளாமல் எந்த ஒரு தீர்மானமும் அவர் எடுத்ததில்லை. மேலும் தன்னுடைய ஒவ்வொரு எண்ணத்தையும் சோதித்தார். இந்த எண்ணம் சிவ பாபாவினுடைய எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளதா? அல்லது தனது சொந்த தேவை மற்றும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதா என்று சரி பார்த்தார்.

**இதன் பொருள் என்ன?**

புத்தியானது அர்ப்பணிக்கப்பட்டும் மனம் அமைதியாகவும் இருக்கும் போது பழைய பழக்க வழக்கங்களை மாற்ற முடியும். இதன் மூலம் ஸ்தூல ரீதியாக இதுவரையிலும் இருந்து வந்த அணுகு முறையிலும் மாற்றம் வரும்.

ஊனக்கண்கள் மூலமாக ஊனைப் பார்த்தால் மனதில் சஞ்சலமுண்டாகிறது. ஆதலால் அறிவுக்கண்ணால் ஆத்ம தரிசனம் செய்யுங்கள். இது தேகாபிமானத்தை விலக்கும். ஆத்ம அபிமானியாக மாற்றும். இதுவே உலக சகோதரத்துவத்திற்கும் அஸ்திவாரம்.



# ஆசீர்வாதம், அழிவற்ற செல்வம்

பி.கு ஷீலுஜி, மதுபன் (தமிழாக்கம்)

இக்காலத்தில், பொதுவாக எல்லோருக்குமே பணம் சம்பாதிக்க வேண்டும், சேமிக்க வேண்டும், பெருஞ்செல்வந்தராக வேண்டும் என்பதில் கவனம் அதிகமாயிருப்பதைப் பார்க் கிறோம். வணிக ரீதியில் மிகப்பெரிய அளவில் போட்டி மனப்பான்மை இருப்பதையும் பார்க்க முடிகிறது. இதன் காரணமாக பொறாமை இயல்பான குணமாக ஆகிவிடக் கூடும். இரவு, பகலாக உழைக்கத் தயாராயிருக்கிறோம். இதனால் சமூகத்தில் ஒரு அந்தஸ்து உண்டாகும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு. வருமானத்திலேயே குறியாக இருப்பவர்கள் வாழ்க்கையில் அமைதியும், திருப்தியும் அவசியம் என்பதில் கவனம் செலுக்கத் தவறிவிடும் வாய்ப்புகள் அதிகம், வருமானம் பெருகிக் கொண்டே இருக் கிறது. ஆனால் இது நேர்வழியில் வந்திருக்கு மானால் சரிதான். ஏனெனில் இந்த வருமானத் தில் சம்மந்த முடையவர்கள் அநேகர் இருப்பார் கள். இவர்களின் மனோ நிலை, அனுபவங்கள் எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்பதிலும் கவனம் வைப்பது மிக மிக அவசியமானதாக இருக்கிறது. ஏனெனில் இதன் பலா பலன் களும் தனக்குச் சொந்தமான வருமானமாக ஆகிவிடும். ஆதலால் உண்மையான செல்வம் எது? ஆத்மாவாகிய என்னோடு கடைசியில் எது துணையாக வருமோ, அதைத்தான் உண்மை யான செல்வம் என்று ஏற்றுக் கொள்ள இயலும். சற்றே சிந்திப்போம். நமது உழைப்பிலும், அனுகு முறையிலும் பெறுகின்ற ஆசீர்வாதங்களே அனைத்திலும் பெரிய செல்வமாக இருக்க முடியும் அல்லவா ?

### செல்வத்தைக் காட்டிலும் மதிப்பு மிக்கது ஆசீர்வாதங்கள்

வாழ்க்கையில் ஆசீர்வாதங்களைப் பெறுவதே மிகப் பெரிய செல்வந்தராவதாகும். திடீரென பிரச்சனை வரும்போது, உதவக் கூடிய காசோலையைப் போன்றது ஆசீர்வாதம். பண நெருக்கடி நேரத்தில் யாரேனும் ஒருவர் நமக்கு பண உதவி செய்தால் நாம் அவரை எவ்வளவு நன்றியோடு நினைவு செய்வோம். அதுபோல சங்கடமான சூழ்நிலையில் ஆசீர்வாதம் நமக்கு சக்தியளிக்கும் முகமாக உதவுகிறது. நமக்கு உதவி செய்யும் மனிதரை நல்ல துணை என ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் உண்மையான துணை என்பது ஆபத்தான சூழ்நிலையில் பலனை எதிர்பாராது வரும் உதவியாகும்.

**உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

வாழ்வில் பலருடைய ஆசீர்வாதங்களைப் பெற்ற ஒரு மனிதருக்கு ஒரு போதும் ஏமாற்றமும், துக்கமும் வராது, உண்மையில் ஆசீர்வாதம் பொருட் செல்வத்தை விட மேலானது. பொருட் செல்வம் கொள்ளையடிக்கப் படலாம். நெருப்பில் அழிந்து விடலாம். தொழிலில் நஷ்டம் உண்டாகலாம். ஆனால் ஆசீர்வாதம் என்னும் அருட்செல்வத்தை வழங்குவதால் நமக்கு நஷ்டம் ஏதுமில்லை. ஏனெனில் இது ஆத்மாவினுள் கலந்திருக்கும் செல்வமாகும். வாழ்க்கையில் யாரொருவர் ஆசீர்வாதங்கள் எனும் அருட்செல்வத்தை சேமித்து வைத்திருக்கின்றாரோ அவரே மிகப்

பெரிய செல்வந்தர். அவருக்கு இந்தப்பிறவியில் மட்டுமின்றி மேலும் பல பிறவிகளுக்கும் அருட்செல்வமாகிய ஆசீர்வாதம் கூட வரும். அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் ஆசீர்வாதத்தின் பலத்தை அனுபவம் செய்வார். ஆனால் ஆசீர்வாதத்தைச் சம்பாதிப்பது அவ்வளவு எளிதல்ல. பணம் சம்பாதிப்பது எளிது ஆனால் பணம் இன்று வரும் நாளை சென்று விடலாம். ஆனால் ஆசீர்வாதம் என்ற செல்வம் ஒரு முறை வந்தடைந்து விட்டால், அவ்வளவு எளிதாக நம்மை விட்டுச் சென்று விடாது. இதுதான் ஆசீர்வாதம் என்ற செல்வத்தின் முக்கியத்துவம், ஆதலால் நாம் எப்போதுமே ஆசீர்வாதம் பெறுவதற்கும், கொடுப்பதற்கும் தயாராகவே இருப்பதில் கவனம் உள்ளவராக இருப்பது நலம்.

ஆசீர்வாதம் வழங்குதல் எளிதுதான். ஆனால் ஆசீர்வாதம் பெறுதல் அவ்வளவு எளிதானதல்ல. மனதார ஆசீர்வாதம் வழங்கும் போது நீங்கள் தலைவனாக இருக்கின்றீர்கள். ஆனால் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு. தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது என்பதுதான். ஏனென்றால், ஆசீர்வாதம் மனதிலிருந்து வெளிப்படக்கூடியது. யாசிப்பதால் கிடைப்பதல்ல. சிலர் என் தலை மீது கை வைத்து என்னை ஆசீர்வதியுங்கள் என்று கேட்கின்றனர். ஆசீர்வாதம் வாயிலிருந்து வருவதல்ல. மனதிலிருந்து தானாக, இயல்பாக வருவதாகும். அன்பான மருத்துவர் ஒருவர் தன்னிடம் உள்ள நோயாளியிடம், கவலைப்படு வதற்கு ஒன்றுமில்லை. மருந்து, உணவு இவற்றை சரியான நேரங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் உங்களுக்காகப் பிரார்த்தனை செய்வேன் என்பார். ஆசீர்வாதம் வழங்குதல் எளிது. ஆனால் அதற்குரியவராகும் தகுதியுடைய வராக விளங்குதல் தான் சிறப்புடையதாகும்.

### நற்செயல்கள் மூலம் ஆசீர்வாதம் அடைதல்

நற்செயல்களைச் செய்வதும், பணிவுடன் நடப்பதன் மூலம் ஆசீர்வாதங்களைப் பெற முடியும். ஆசீர்வாதம் என்பது நம்மை விட வயதில் சிறியவர்களிடமிருந்தும் கிடைக்க இயலும். அதாவது தேவையின் போது பிறருக்கு உதவி செய்தால் அவர் சிறியவராயிருப்பினும் அவர் மனதிலிருந்து முகத்தில் காணப்படும் புன்னகை தான் ஆசீர்வாதம் .அத்யாவசியமான நேரத்தில் மனதார பிறருக்கு உதவி செய்யும் போது ஆசீர்வாதம் கிடைக்கும். ஆனால் சுய நலத்தோடு செய்யப்படும் உதவிக்கு ஆசீர்வாதம் கிடைப்பதில்லை. ஆகையால், பிறரிடமிருந்து மனதார வாழ்த்துக்களைப் பெறுவதற்கு சுய நலமற்ற பாவனையுடன் நேரத்திற்குத் தக்கவாறு, மேலும் எந்த பிரதிபலனையும் எதிர்பாராது உதவி செய்வதால் ஆசீர்வாதம் கிடைக்கும்.

மூத்தவர்களுடைய ஆசிகள், சிறியவர் களாகிய நமக்குண்டு உதாரணமாக ஒவ்வொரு தாயும், தந்தையும் தங்கள் குழந்தைகள் மீது ஆசீர்வாதம் வழங்குகின்றனர் என்றாலும் எப்போது, தம் குழந்தைகள் கீழ்ப்படிதல் உள்ளவராக இருக்கின்றார்களோ, அப்போதுதான் ஆசீர்வாதம் கிடைக்கும். பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகள் மீது எப்போதும் நல்லெண்ணமே இருக்கும். எந்த ஒரு பெற்றோ ரையும் எதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறீர்கள் என்று கேட்டால், நாங்கள் எங்கள் குழந்தைகளின் எதிர்காலத் திற்குத் தான் சேமிக்கின்றோம் என்பார்கள். இந்த சுபாவம் பொதுவாக எல்லோரிடமும் இருப்பதைப் பார்க்க முடியும் மேலும் தாய் தந்தையர் என்று சொன்னால் வெறும் செல்வம் மட்டுமே சம்பாதித்துச் சேமிப்பு வைப்பதில்லை. தங்களிட மிருந்த சொத்து, சுகம், சந்தோஷம் அனைத்தையுமே தியாகம் செய்கின்றனர். ஆதலால் குழந்தைகளும் தங்கள் பெற்றோரின் ஆசிகளைப் பெறுகின்ற தகுதியுடையவர் களாகவும் இருக்க வேண்டியது அவசியம். நல்ல நடத்தையும், கீழ்ப்படிதலுள்ள குணமும் முக்கிய

மானதாகும். உதாரணமாக சில குடும்பங்கள் இருக்கின்றன. பெற்றோர்கள் அவ்வளவு கல்வியறிவு இல்லாதவர்களாக இருப்பார்கள். இத்தகைய குடும்பங்களில் ஒரு சில இளைஞர் கள் இது கணிப்பொறி யுகம், ராக்கெட் யுகம், விஞ்ஞான யுகம், கடந்த காலத்திலேயே இருக்கும் பெற்றோர்களுக்கு இவையெல்லாம் தெரியாது என்று எண்ணுகின்றனர். தாய் தந்தை யின் அறிவையும், அனுபவங்களையும் துச்சமாக மதிக்கின்றார்கள். இதன் விளைவாக சிலர் பெற்றோரின் அறிவுரை களை அவமரியாதை செய்கின்றனர். அவர் களின் உண்மையான அன்பையும், தியாகத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆதலால் பெற்றோர்களிடம் எப்போதும் அவர்கள் கட்டளைப்படி நடப்பதும், பணிவுடன் நடந்து அவர்களின் ஆசிகளைப் பெறுகின்ற யோக்கியதாம்சம் உடையவராதலே பிறவிப் பயனடை தலாகும்.

## இறைவனின் ஆசிகளைப் பெறுவது எப்படி?

பரமாத்மாவாகிய இறைவன், தனது குழந்தைகள் தன்னைப் போல ஆக வேண்டும் என்று விரும்புகின்றார். எவ்வாறு உலகினரும் கூட தங்கள் குழந்தைகள் தங்களை விடவும் உயர்ந்தவராக வேண்டும் என்றே விரும்பு கின்றனர். இதுபோலவே அனைவரிலும் உயர்ந்த சர்வசக்திவான், நமது நன்மையை விரும்பு கின்றவராக, நாம் சுகம், சாந்தி, அன்பு, அமைதி யின் சொரூபமாக வேண்டும் என்றே விரும்பு கின்றவராக இருக்கின்றார். ஆதலால் கருணைக் கடலாக விளங்குகின்ற பரம தந்தை பரமாத்மா வின் வழிப்படி நடந்து வந்தால் இறைவனுடைய ஆசிகளுக்கு உரித்தானவர்களாவோம். இறைவன் எல்லையற்ற கருணை உள்ளம் படைத்தவர் என்ற அனுபவம் நமக்குண்டு. ஆதலால் நாம் அவர்காட்டும் வழிப்படி நடக்க வேண்டும். அதாவது சுபாவத்தில் பணிவுத் தன்மை உடையவராக, மன்னிக்கும் சுபாவம் உடையவராக வேண்டும். அதாவது மன்னிப் பதற்கு முயற்சி அதிகம் தேவையில்லை. விசாலமான மனம் இருந்தால் மட்டும் போது மானது. சில மனிதர்கள் மற்றவர்களுக்கு அறிவுரை வழங்குவர். ஆனால் மன்னிக்கும் தன்மை இருப்பதில்லை. அறிவுரை நாம் அனைவரிடமிருந்தும் பெறலாம். பாடமும் கற்றுக் கொள்ளலாம். முக்கியமானது எல்லோரிட மிருந்தும் நல் ஆசிகளுக்கு உகந்தவராக வேண்டும் என்பதில் கவனம் அவசியமான தாகும் பிறருக்கு அறிவுரை வழங்க முடியுமானால் நல்லது தான். ஆனால் நான் அதனைக் கடைப்பிடித்து வருகிறேனா என்பது முக்கியம். உதாரணமாக, நீ கோபப்படக் கூடாது என்று சொன்னால், அந்த அறிவுரை தனக்கும் பொருந்து மல்லவா?

மேலும் ஆசீர்வாதம் பெறுதல் மற்றும் வழங்குதல் ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும். ஒவ்வொரு நாளும், இன்று நாள் முழுவதும் ஆசிகள் பெறக்கூடிய மற்றும் ஆசிகள் வழங்கக் கூடிய காரியம் செய்வேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டு செயல்படலாம். மனதாலும், வார்த்தை களாலும், பார்வையாலும், செயல்களாலும் ஆசீர்வாதம் வழங்க இயலும். இதற்கு எப்போதும் மனம் அமைதியாக இருப்பது அவசியமாகிறது. என் மனதில் எப்படிப்பட்ட எண்ணம் உள்ளதோ அதுதான் வார்த்தைகளாக வெளிவரும், செயலாக உருவாகும். நல்லவை யாயிருக்கும் போது அது பலரை தன் பக்கமாக கவர்ந்து இழுக்கும். உயர்த்தவும் செய்யும். அசுபமாக இருந்தால், பிறரை கீழே தள்ளி விடவும் காரணமாகி விடுவேன். ஆதலால் எப்போதும் கவனமாக இருக்க வேண்டியது மிக அவசியமானதாக இருக்கிறது. ஏனெனில் இதன் பலன் என்னைச் சார்ந்ததாக ஆகிவிடுமல்லவா? ஆதலால் அவ்வப்போது அல்லது அடிக்கடி சுய சோதனை செய்வதும் அவசியம். அதாவது இன்று எனது லட்சியம் ஆசி பெறுதல் மற்றும் வழங்குதலாகும். இதில் எனது நடைமுறையில் நிகழ்ந்தது என்ன?

இதை நினைவில் கொள்வது நல்லது. நான் பகவானின் நல்ல குழந்தையாக மாற வேண்டும். பிறருக்கு எப்போதும் ஆசிகள் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் விதை யுங்கள். மக்கள் பலவிதமானவர்கள். நாம் நற்காரியம் செய்தாலும் புகழ்ந்து பேசுவர். தவறான காரியங்கள் செய்தாலும் ஏசுவர். ஆகையால் நம்முடைய ஆத்மா எதை ஏற்றுக் கொள்கிறதோ அதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பிறர் வழிப்படி நடப்பதால் பயனொன்றுமில்லை. ஆதலால் எப்போதும் இறை வழிப்படியே நடப்பது பயனுள்ளதாகும். உதாரணமாக ஒரு கதை உள்ளது. ஒரு நாள் வழிப் பயணத்தின் போது ஒரு தகப்பனும், மகனும் ஒரு கழுதையுடன் நதியைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். தகப்பன் தான் மகனை கழுதையின் மீது அமர செய்தார். இதைப் பார்த்த மற்றவர் தகப்பனிடம் நீ வயதானவன் அல்லவா? கழுதை மீது நீ தான் அமர்ந்திருக்க வேண்டும் என்று சொல்லவே, கழுதை மீது ஏறி அமர்ந்து விட்டார். மகனை கீழே இறக்கிவிட்டார். இதைப்பார்த்த இன்னொருவர் பாருங்கள், அந்தச் சிறுவனை நடக்கவிட்டு, இவர் கழுதை மீது அமர்ந்திருக் கிறாரே என்றனர். இதைக் கேட்டு, தகப்பன், தன் மகனையும் கழுதை மீது அமரச் செய்தார். இதைப் பார்த்து இன்னொருவர், பாவம் கழுதை, இதன் மீது இரண்டு பேர் அமர்ந்திருக்கிறார்களே என்றனர். இதைக் கேட்டு இருவரும் கீழே இறங்கி கழுதையுடன் நடந்தே சென்றார்கள். இதைப்பார்த்த இன்னொருவர் சொன்னார். இவர்கள் எவ்வளவு முட்டாள்கள் ! கழுதை காலியாகச் செல்கிறது இவர்கள் ஏன் நடந்து செல்கிறார்கள் என்று. இதைக் கேட்டு தகப்பனும், மகனும் ஆளுக்கொரு பக்கமாக கழுதையைத் தூக்கிப்பிடித்து சுமந்து கொண்டு சென்றனர். திடீரென கழுதை கத்த ஆரம்பித்து கால்களை உதைக்க, இவர்களின் பிடியிலிருந்து கழுதை கீழே விழுந்து விட்டது. இதுதான் பிறரின் கூற்றுப்படி நடப்பதன் விளைவு. ஆதலால் நமது நற்புத்தி என்ன சொல்கிறதோ, அதன்படி நடப்பதுதான் நல்லது.

நம் புத்தியை நற்புத்தியாக்குவது அதாவது தூய்மையாக்குவது தியானம். இதில் இராஜ யோகக் கல்வி உதவியாயிருக்கும். நாம் நமக்காக தூய்மையான, உண்மையான உள்ளத்துடன் ஆசிகள் வழங்குபவராக இருப்பதற்காக ஈஸ்வரனின் ஆசிகளைப் பெறுவதுடன், உலகத்தினரிடமிருந்தும் நமது நல்ல அணுகுமுறை மூலமாக ஆசிகளைப் பெறுவதும் அவசியமானதாக இருக்கிறது. இதன் மூலம் இன்றைய வாழ்க்கையிலும், வருங்காலத்திலும் புண்ணிய ஆத்மாவாக, பூஜைக்குரிய, மகிமைக்குரிய மகான் ஆத்மாவாக ஆக முடியும். இவ்வாறு எல்லோரிடமிருந்தும் பெறுகின்ற ஆசிகளின் ஆதாரத்தில், உங்கள் வாழ்க்கை சிரேஷ்டமானதாய் ஆகிவிடும். நம்பிக்கை வையுங்கள். உங்கள் அனைவர் மீதும் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. இதுவே நீங்கள் எங்களை வாழ்த்துவதாகும்.

## ஈஸ்வரிய உறவு - தாதிஜி

நான் இறைவனுடைய குழந்தை. இந்த ஸ்திதியில் உறுதியாக இருந்து மகாவாக்கியம் கேளுங்கள். ஏனோ, தானோ என்று கேட்காதீர் கள். மிக கவனத்துடன், அன்புடன், ஆத்ம முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு கேளுங்கள். அதை ஆழமாகச் சிந்தியுங்கள். அனுபவத்தைப் பிறருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள். இவ்வாறு உங்கள் சம்மந்தம் இறைவனோடு எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ, அவ்வளவு அதிக சக்தியை அடைய முடியும். பயம் முடிவுக்கு வந்து விடும். உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு விசயமும் எளிதாகிவிடும். நீங்கள் சிரேஷ்டமானவராக ஆகிவிடுவீர்கள்.



**அடையார்:** மன நலம் குன்றியவர்களுக்கான சர்வதேச யோகா தின விழாவில் உரை நிகழ்த்துகின்றார் பி.கு. மைதிலி




**மரக்காணம்:** சர்வதேச யோக தினவிழாவில் கலந்து கொண்ட நகர முக்கியஸ்தர்களுடன் பி.கு. விஜயலட்சுமி.



**தர்மபுரி:** பள்ளி மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கோடைக்கால சிறப்பு பயிற்சியில் கலந்து கொண்ட மாணவ மாணவர்களுடன் பி.கு. பாக்கியா மற்றும் முக்கிய விருந்தினர்கள்




நாமக்கல்: சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் நகர பிரமுகர்களுடன் பி.கு. ஜெயந்தி.



**ஊட்டி:** சர்வதேச யோக தினவிழாவில் பி.கு. வெங்கடேஷ் (மதுபன்) மற்றும் நகர பிரமுகர்கள் உரை நிகழ்த்துபவர் பி.கு. இராஜேஸ்வரி.



**நாகப்பட்டினம்:** தியானம் மூலம் மகசூல் அதிகரிப்பு என்ற நிகழ்ச்சியில் உரையாற்றுகின்றார் பி.கு. தெய்வநாயகி, உடன் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலைய தலைவர் அனுசுயா



**அடையார்:** மம்மா தினம் மற்றும் தபஸ்யா ஆண்டு விழாவில் குத்துவிளக்கு ஏற்றுபவர்கள்: திரு. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், திரு. P.G. வேணுகோபால், Dr. P.S. லலிதா, பி.கு. முத்துமணி.




**இராமேஸ்வரம்:** சர்வதேச யோக தினவிழாவில் பி.கு. இராமநாதன், திரு. முரளி குமார், துணைக்காவல் ஆய்வாளர், ஸ்ரீமத்சுவாமி ருத்திரானந்தா, ஸ்ரீ இராமகிருஷ்ணமடம், திரு. கே. முரளிதரன், பாஜக செயற்குழு உறுப்பினர், பி.கு. மீனாட்சிசுந்தரம்

# ரக்ஷா பந்தன் விழா காட்சிகள்



**சென்னை:** தேமுதிக தலைவர் விஜயகாந்த் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சித்ரா



**சென்னை:** தமிழக பாஜக தலைவர் திருமதி தமிழிசை சௌந்தராஜன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சித்ரா



சென்னை: வசந்த் & கோ இயக்குநர் திரு. வசந்தகுமார் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. ரங்கநாயகி உடன் பி.கு. கோமதி.



**சென்னை:** 4 Frames Studio, Manager திரு. கல்யாணம் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சித்ரா



பிரபல இயக்குநர் திரு. K. பாக்கியராஜ் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சித்ரா



பாஜக தலைவர் இல. கணேசன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சித்ரா



**சென்னை:** பிரபல நடிகர் திரு. ஜெயராமன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கும் முன் திலகமிடுகின்றார் பிகு. சித்ரா



**சென்னை:** இயக்குநர் மற்றும் ஆக்டர் திரு. விஷால் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சித்ரா



**சென்னை:** பிரபல இயக்குநர் மற்றும் நடிகர் திரு. R. பார்த்திபன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பிகு. சித்ரா



**சென்னை:** இயக்குநர், எழுத்தாளர் திரு. பி. வாசு அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சித்ரா



**சென்னை:** நாயுடு ஹால் MD திரு. வேணுகோபால் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பிகு. சித்ரா



சென்னை: பகவத் கீதை சொற்பொழிவாளர் பேராசிரியர் பிரேமா பாண்டுரங்கன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பிகு. நீலிமா

# ரக்ஷா பந்தன் விழா காட்சிகள்



**சென்னை:** மாண்புமிகு அமைச்சர் திருமதி கோகில இந்திரா அவர்களுக்கு ராக்கி அணிவித்த பின் இராஜயோகினி பி.கு. நிர்மலாஜி. (மதுபன்) பி.கு. பீனா, பி.கு. ஜான்சிராணி, பி.கு.சரோஜா



**கோயம்பத்தூர்:** பி.கே. வானவராயர், பாரதி வித்யாலி பவன் அவர்களுக்கு ராக்கி அணிவித்த பின் பி.கு. இராஜேஸ்வரி, பி.கு. கௌதமி



**சென்னை:** மாநகர மேயர் மாண்புமிகு சைதை துரைசாமி அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. தேவி



சென்னை: ஸ்ரீபெரும்புதூரில் உள்ள RGNIYD வருகை தந்த சமீபத்தில் நோபல் பரிசு பெற்ற Prof. முகமது யுனஸ் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. ருக்மணி உடன் பி.கு. ஈஸ்வரன்



மதுரை: மாநகர மேயர் திரு. இராஜன் செல்லப்பா அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. செந்தாமரை




சிவகங்கை: ரக்ஷாபந்தன் விழாவில் ஜெயசௌந்தரம் மில்ஸ் M.D பி.கு. கோதை, மாவட்ட திட்ட இயக்குநர் திரு. பிரபாகர், பி.கு. விமலா. உரையாற்றுகின்றார் பிகு. உமா, மதுரை



மதுரை: ஆட்சியாளர் Dr. L. திரு. சுப்பிரமணியன் IAS அவர்களுக்கு ராக்கி அணிவிக் கின்றார் பி.கு. உமா



புதுக்கோட்டை: ஆட்சியாளர் திரு. எஸ். கணேசன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. தெய்வ நாயகி



**மதுரை:** திரு. நடராஜன், Joint Commissioner, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருகோவில் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பிகு. செந்தாமரை, உடன் பி.கு. அமிர்தலட்சுமி



**மதுரை:** திரு. அபாய்குமார் சிங் IPS அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பிகு. செந்தாமரை, உடன் பி.கு. அமிர்தலட்சுமி



மதுரை: திரு. குல்தீப்சிங், Airport Director அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. செந்தாமரை



**சென்னை:** யோகமுறையில் விவசாயம் செய்வோம் என உறுதிமொழி எடுத்த பி.கு. சகோதர சகோதரிகள்



சென்னை: Smile & Succed என்ற நிகழ்ச்சியில் திரு.சார்லஸ் லோபோ, Chief Post Master General , பி.கு. ரஞ்சனி, பி.கு. ஜான்சிராணி, பி.கு. கல்பனா மற்றும் தபால் துறையை சார்ந்தவர்கள்.




**போடிநாயக்கனூர்:** சர்வதேச யோக தினவிழாவில் பி.கு. பொற்கலை, திருமதி பாண்டி அம்மாள், திருமதி சரஸ்வதி, செந்தில்குமார், கணேஷ்குமார்



**சென்னை (ஹேப்பி வில்லேஜ்)** Stress Free Life சிறப்பு பயிற்சி அளிக்கின்றார் பி.கு. ரஞ்சனி



**சென்னை** Residency Towers ஹோட்டலில் உரை நிகழ்த்திய பின் பங்கேற்றவர்களுடன் பி.கு. கிரிஷ் (மும்பை)




**உடுமலைப்பேட்டை:** கம்யூட்டர் பயிற்சி நிலையத்தில் இராஜயோக தியானப்பயிற்சி அளிக்கப்பட்டது.



**சென்னை:** சமீபத்தில் சென்னை வருகை தந்த டாக்டர் பி.கு. நிர்மலாஜி (மதுபன்) மற்றும் பி.கு. அர்மான் (ஆஸ்திரேலியா)



சென்னை (ஹேப்பி வில்லேஜ்): ஆன்மீக சுற்றுலா எனும் நிகழ்ச்சியில் வெளி மாநிலத்திலிருந்து வந்து கலந்து கொண்ட குழுவிற்கு சிறப்பு பயிற்சி அளிக்கிபடுகிறது.



சிறுகதை

# ஜீவகாருண்யம்

பாரதம் பல மகான்கள் பிறந்து வளர்ந்த பூமி. மக்களுக்காக சிறந்த சித்தாந்தங்களை தந்த தியாக சீலர்கள் வாழ்ந்த தவபூமி. இவர்களில் உதாரணமாக கௌதம புத்தர், தேசப்பிதா மகாத்மா காந்தி போன்ற மகான்களின் வாழ்க்கையில் தியாகம், அன்பு, இரக்கம் ஆகியன மேலோங்கி யிருந்தது என்பதை அறிந்திருக்கிறோம். இக்கட்டுரையில் ஜீவகாருண்யம் பற்றிய உண்மை சம்பவம் ஒன்று சிறுகதையாக நினைவுக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒருமுறை காந்திஜி பீஹார் மாநிலத்திலுள்ள சம்பாரன் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு நாள் தங்க வேண்டிய தாயிற்று. அன்றைய தினம் அந்த கிராமத்தில் ஊர்வலமாக மக்கள் சென்று கொண்டிருந்தனர். அந்த ஊர்வலத்தில் போய்கொண்டிருந்த ஜனங்கள் தேவிக்கு பலி தானம் கொடுப்பதற்காக ஒரு அழகிய சிறு ஆட்டுக்குட்டி ஒன்றையும் அவர்களுடன் நடத்திக் கொண்டு தாரை தப்பட்டைகளுடன் ஆரவாரத்தோடு சென்று கொண்டிருந்தனர். இந்த சத்தத்தைக் கேட்ட காந்திஜி தன் நண்பரிடம் ஜனங்கள் ஊர்வலமாக எங்கே சென்று கொண்டிருக்கிறார்கள்? எதற்காக இவ்வளவு இரைச்சல் என்று கேட்டார். அப்போது அருகாமையில் அமர்ந்திருந்த ஒருவர் தேவிக்கு பலிகொடுக்க ஆட்டுக்குட்டியைக் கொண்டு செல்கிறார்கள் என்று பதில் கூறினார்.

இதைக்கேட்ட மாத்திரத்தில், காந்திஜி வீட்டை விட்டு வெளியேறி ஊர்வலத்தினரோடு சேர்ந்து கொண்டார். ஊர்வலத்தினர் முன்னே அப்பாவியான ஆட்டுக்குட்டி இருந்தது. அதன் கழுத்தில் பூமாலை தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த உடனேயே காந்திஜிக்கு அதன் மீது அளவற்ற இரக்கம் உண்டானது. அவரும் ஊர்வலத்துடன் தொடர்ந்து சென்றார். ஊர்வலம் ஒரு கோவிலை வந்தடைந்தது. ஜனங்கள் ஆட்டுக் குட்டியை தேவிக்கு முன் கொண்டு வந்து நிறுத்தினர். உடனே காந்திஜி அந்த ஆட்டுக்குட்டிக்கு முன் வந்து நின்று கொண்டார். கூட்டத்திலிருந்த சிலர் காந்திஜியை அடையாளம் கண்டு கொண்டனர். ஏனெனில் சமீபத்தில் தான் சம்பாரன் சத்தியாக்கிரஹம் முடிந்திருந்தது. காந்திஜியை அங்கு பார்த்தவுடன் அவர்களுக்கு என்னவோ போலாகி விட்டது.

அப்போது காந்திஜி கூடியிருந்தவர்களைப் பார்த்து எதற்காக இந்த ஆட்டுக் குட்டியை இங்கு கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார். தேவிக்கு பலி கொடுத்து தேவியை மகிழ்விப்பதற்காகவே கொண்டு வந்திருக்கிறோம் என்றார்கள். அப்போது காந்திஜி கூறினார். ஆட்டுக்குட்டியை விட மனிதன் விசேஷ மானவன் தானே? நாம் ஆட்டுக்குட்டிக்குப் பதிலாக மனிதனை பலி கொடுத்தால் தேவி அதிகமாக திருப்தி அடைவாள் அல்லவா? காந்திஜியின் இவ்வார்த்தைகளைக் கேட்டு ஜனங்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் யாரும் பேசுவதாக இல்லை. காந்திஜி பின்னர் கூறினார். தேவிக்கு பலி யாவதற்காக உங்களில் யாராவது தயாராக இருக்கிறீர்களா? அப்படி யாரும் தயாரில்லை என்றால் நான் தயாராயிருக்கிறேன் என்றார். ஆட்டுக்குட்டியை விட விசேஷமாக தேவிக்கு அதிகப் பிரியமானதை பலி கொடுங்கள் என்றார்.

கிராம ஜனங்கள் அனைவரும் ஒன்றும் புரியாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்து அவர்களிடம் காந்திஜி கூறினார். பேச முடியாத இந்த குற்றமற்ற பிராணியை பலி கொடுப்பதால் தேவி சந்தோஷமடைவாளா? இது உண்மையானால் மனிதனுடைய இரத்தம் இன்னும் அதிக விலை மதிப்புடையது. ஆனால் அப்படி யாரும் செய்வதில்லை. குற்றமற்ற அப்பாவி பிராணிகளை பலி கொடுப்பதால் புண்ணியமில்லை. இது பாவம், அதர்மம். நீங்கள் எல்லா பிராணிகளிடமும் அன்பாயிருங்கள். எல்லா ஜீவன்களையும் தன்னைப்போல் நேசியுங்கள். இந்த ஆட்டுக்குட்டியை விட்டுவிடுங்கள். இதை விடுதலை செய்வதன் மூலம் தேவி உங்கள் மீது அதிக சந்தோஷமடைவாள் என்றார்.

காந்திஜியின் வாய் மூலமாக இந்த சத்திய வசனங்களை அனைவரும் கேட்டனர். இது ஜனங்களிடம் ஒரு பிரபாவத்தை உண்டாக்கி விட்டது. ஜனங்கள் தேவிக்கு பலிகொடுக்காமலே அமைதியாக அங்கிருந்து கலைந்து சென்று விட்டனர். ஆட்டுக்குட்டி உயிர் பிழைத்தது.

**நாம் எதை வழங்குகிறோமோ அதையே பெறுவோம்! ஆகையால் நல்லதைப் பெறுவதற்காக, நல்லதையே தானம் செய்வோம்.**

**நாம் மற்றவைகளின் சிறகை ஒடித்தால், ஆத்மாவாகிய நம்மால் பறக்க முடியாமல் போய்விடும்**

**நம்மால் பிறர் வேதனையால் நடுங்குவார்களேயானால் ஆழமான அமைதியை நம்மால் அனுபவம் செய்ய முடியாது.**

**ஒழுக்கமில்லாதவன் தன் தாயாலும் பிறன் போல் பார்க்கப்படுவான் என்பது முதியோர் சொல்**


**மனதை அடக்க முயற்சி செய்யாதீர்கள். பதிலாக ஆக்க பூர்வ எண்ணங்களை ஓட விடுங்கள். மனதில் வீணான எண்ணங்கள் எழாமலிருப்பதும், மௌனத்திற்கு ஒப்பாகும்.**

## அவசியமானால் மறதியும் அவசியமே

இப்படித்தான் ஒருவர் அனைவரின் வற்புறுத்துதலால் தன்னை மருத்துவ ஸ்கேன் எடுக்க சம்மதித்தார். அதில் அவருக்கு கட்டி இருப்பதாக தெரியவந்தது. அது வரை எந்த வலியும் இல்லாதிருந்த அவருக்கு, இந்த செய்தி தெரிந்த அடுத்த கணத்திலிருந்து ஏதோ வலியிருப்பதாக உணர ஆரம்பித்துவிட்டார். இப்பொழுது சொல்லுங்கள் வலி நினைவில் இருக்கின்றதா அல்லது மறதியில் இருக்கின்றதா? பெரிய அணுகுண்டே உங்கள் அருகில் இருந்தாலும் உங்களுக்கு அது தெரியாத வரை எந்த பிரச்சனையுமில்லை. அதை அறிந்தவர்கள் சுயநலம் கருதி யாரிடமும் சொல்லாமல் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி அவசரத்தில் கீழே விழுந்து இறந்தவர்கள் ஏராளம். மறதி உங்களை பாதுகாக்கும் மகத்தான சாதனம்.

# மறதி விளையாட்டு

பி.கு. சென்பகராஜ், மதுரை



மனித வாழ்க்கையில் மறதி என்பது தேவையா? அல்லது தேவையில்லையா? நமது நினைவுகள் அவசியமான காரியத்திற்கு உதவாத நிலைக்குப் பெயர் தான் மறதி. சரியான நேரத்தில் சரியான காரியங்கள் முடிக்கப்படு வதற்கு நினைவு ஒன்று தான் வழி என்று நாம் நினைத்துக் கொண்டுள்ளோம். மறதியாலும் கூட காரியம் முடியலாம். எது சரி? நினைவு மற்றும் மறதி என்பது மனம் சம்பந்தப்பட்டது. கடந்த காலத்தில் பிடிக்காத விசயங்களை நினைக்கும் பொழுது பல கசப்பான அனுபவம் ஏற்படுகின்றது எனில் மறப்பது நன்றே அல்லவா? அல்லது பிடித்த விசயங்களை மறந்து விட்டால் அதே மறதி தீயதாகின்றது. மறதி வியாதியா? அல்லது மறதி ஒரு குணமா? மறதி ஒரு தீய குணம் என்று எங்கும் சொல்லவில்லை, மறந்தது நமது குற்றமே ஒழிய மறதி என்பது குற்றமானது அல்ல. நாம் ஒரு பொருளை போகும் வழியில் கொடுக்க மறந்ததால், பல வேலைகளை முடித்துவிட்டு திரும்பி வரும் பொழுது கொடுத்துவிட்டாலும், இதற்கிடையில் பொருளைக் கொடுக்கவில்லை என்ற எண்ணம் பல முறை நம் மனதில் ஒரு இனம் தெரியாத சுமையை ஏற்படுத்தியிருக்கும். அதனால் ஏற்பட்ட விளைவுகள் ஏராளம். ஆனால் அதற்கு மறதி காரணமல்ல, மறந்தது தான் குற்றம். ஆகையால் வேண்டாதது மறந்து போவதும், வேண்டியது மறந்து போகாமல் இருப்பதும் நியதிக்குட்பட்டதேயாகும்.

**நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்ல**
**அன்றே மறப்பது நன்று**

தீயதை அன்றைக்கே மறப்பது நல்லது என்கிறார் திருவள்ளுவர். ஏன் அந்த கணமே மறப்பது அதைவிட நல்லதே. ஆனால் மறதியினால் அனேக பிரச்சனைகளை நாம் எதிர் கொள்வதாக நினைத்து வருகின்றோம். அதாவது செய்யப்படவேண்டிய வேலை நின்று விடுகின்றது. எத்தனையோ விபத்துக்கள் கூட சில மறதியினால் தான் வருகின்றது. இரயில் பயணம் மேற்கொள்ள பல நாட்களுக்கு முன் முன்பதிவு செய்தும் பயணத்திற்கு புறப்படும் இறுதியான தருணத்தில் பயணச்சீட்டு எடுத்துக் கொண்டு செல்லவில்லை எனில் பல பின் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியதாகி விடுகிறது. இருசக்கர வாகனத்தில் செல்லும் பொழுது வரும் அலைபேசி அழைப்பை எடுத்துப் பேசிவிட்டு, சிறிது நேரம் கழித்து யாரோ பேசினார்களே, என்ன பேசினார்கள், என்று மூளையை கசக்குவதும் உண்டு. இப்படி விசயங்கள் ஏராளம். சிலர் வயதாகிவிட்டாலே மறதியும் கூடவே வந்துவிடும் என்று மனதை தேற்றிக் கொள்கின்றனர். உடலின் வயதிற்கும் மறதிக்கும் என்ன சம்பந்தம்? மறதி நம் மனம் புத்தி சம்பந்தமானது. பள்ளியில் படிக்கும் மாணவர்களிலிருந்து பழுத்த பாட்டி வரைக்கும் மறதி உள்ளது. சிறு மாணவ வயது பல வினோதங்களைப் பார்த்து ஆச்சரியப்படும் வயதாகும். அதை அறியாது, பெரியவர்கள் அந்த பிஞ்சிடம், படிப்பைப் பற்றி ஏதாவது கேள்வியைக் கேட்டுவிட்டு, இவனுக்கு மறதி அதிகமாக உள்ளது என்று பட்டத்தை அங்கேயே சூட்டி விடுகின்றனர். அதற்கு அப்புறம் தான் அந்த மாணவனுக்கே மறதி என்பதன் உருவம் இதுவென்று தவறாக தெரிய வருகின்றது. இந்த மறதியைப் பற்றி தவறுதலாக தன் பெற்றோர் தன்னிடம் கூறினார்கள் என்பதைக் கூட மறந்து தன் குழந்தையிடமும் அதே தவறை கூறிவிடுகின்றார்கள். இதை எங்கே போய் சொல்வது? இப்படி குழந்தையிலிருந்தே நம்மை இந்த உலகம் எத்தனையோ விசயங்களில் அடிமையாக்கியுள்ளது !

**கண் முன் விரியும் நிகழ்வுகளே உண்மை.**

எத்தனையோ கடந்த கால கவலைகளிலும், வருங்கால வருத்தமான சிந்தனைகளிலும் நாம் வாழ்கின்றோம். இன்று எதை மறப்பது, எதை நினைப்பது என்பது பெரிய கேள்விக்குறியாக உள்ளது. மேலாளர் கூட்டத்தில், ஒரு விரிவுரையாளர் இந்தக் கேள்வியை பற்றி, கலந்துரையாடல் ஒன்றில் ஆலோசித்ததைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். அதில் மறக்க வேண்டியதை மறக்க வேண்டும், நினைக்க வேண்டியதை நினைக்க வேண்டும் என்று அந்த வாதத்தில் ஏகபட்சமான முடிவாக இருந்தது எனவும், ஆனால் அதில் ஒருவரின் கருத்து மட்டும் மிக வித்தியாசமாக இருந்தது எனவும், அவரின் அந்தக் ஒரு கருத்தே சரியென அனைவரும் ஏற்றுக்கொண்டனர் எனவும் கூறினார். அந்தக் கருத்து என்ன தெரியுமா? என்று கேட்ட அவர் அந்தக் கருத்தைக் கூற தயக்கம் காட்டினார், ஏனெனில் அதை மறந்துவிட்டேன் என்றார். பிறகு சிறிது கால அவகாசம் தாருங்கள் என்றார். இதற்கு மற்றவர்கள் உங்களுக்கு அந்தக் கருத்தைக் கூறும் காலம் இன்னும் வரவில்லை போலும் என்றும் தயக்கத்துடன் கூறினர். அமர்ந்திருந்த அனைவரும் பதிலை அறியாமல், எப்படி விடுவது என்று பல வினாக்களை எழுப்பினர் இந்த பதிலை கேட்க ஆர்வமாக இருக்கும் உங்களுக்கு, அந்த பதில் கிடைக்கவேண்டும் என்றால் கட்டாயம் கிடைக்கும் என்று மழுப்பல் பதிலை அறிய அனேகபேர் மிகவும் கோபம் அடைந்தனர். அதில் ஒருவர் இவர் இப்படியே தான் மழுப்புவார் என நினைத்து எரிச்சலில் தன்னிடம் இருந்த பொருளால் அவரை தாக்கச் முனைந்து விட்டார். அந்த தருணத்தில், ஒரு பயத்தில், அதிர்ச்சியில் அவர் மனம் விழித்துக் கொண்டு விட்டது எனவே எனக்கு நினைவு வந்துவிட்டது (மறதி தெளிந்துவிட்டது) என்று உரக்க கூறியதால், அடிக்கவந்தவர் அவரை விட்டுவிட்டார். பிறகு அனைவரும் அமைதி காத்தனர். அவரும் கூறலானார். நிகழ்காலத்தில் உங்கள் முன் வரும் நிகழ்ச்சியை நாம் மறக்கும் சூழ்நிலையே வருவதில்லை, நினைவிற் கொள்ள வேண்டும் என்றும் முயற்சிப்பதில்லை ஏனெனில் அது உங்கள் முன் நடந்து கொண்டி ருக்கின்றது.. அப்படியெனில் மறக்க வேண்டியது எது? நினைக்கவேண்டியது எது? எதுவுமில்லை. கடந்தது திரும்ப வருவதில்லை. வருங்காலம் நம் கைகளில் இல்லை. இந்த நொடிப்பொழுதில் என்ன நடக்கின்றதோ அதுவே நிச்சயம், மற்றவை எதுவும் உறுதியில்லை. எனவே இப்பொழுது எதைச் செய்யவேண்டுமோ அதையே நினையுங்கள். அதுவே நிரந்தரம். இதை மறந்துவிட்டேன், இதை நினைத்து விட்டேன் என்று நிகழ்காலத்தில் எதுவுமில்லை. நடப்பதை நினைத்து தானே ஆகவேண்டும். அதற்காக மற்றொன்றை மறந்து தானே ஆக வேண்டும். இதில் மறப்பதற்கு என்ன இருக் கின்றது, நினைப்பதற்கு என்ன இருக்கின்றது? இப்பொழுது சொல்லுங்கள், எது சரி? என்று தனக்கு நினைவு வந்ததைக் கூறினார்.

### *மறதி வாழ்க்கையில் நல்விருந்து.*

தினம் தினம் மறக்கும் மருந்து ஒவ்வொருவருக்குள்ளும் இயற்கையாக இருக்கின்றது. இது இறைவன் தந்த வரம் என்று சொல்லலாம். முந்தைய ஜென்மத்தை பற்றி யாருக்கேனும் நினைவு வந்துவிட்டால் எத்தனை பேருக்கு தொல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். மறதி வாழ்க்கையின் நியதி. ஒன்றை மறக்கவில்லை எனில் உங்களையே நீங்கள் மன்னிக்கவில்லை என்று அர்த்தம். ஆகையால் மறந்துவிடு மன்னித்துவிடு (Forget-Forgive) என்று தனக்கு கூறிக்கொள்ளலாம். ஆனால் மற்றவர்களை மன்னித்தால் தான் அவரின் விசயங்கள் நம் மனதிலிருந்து மறந்து போகும் (Forgive-Forget). மற்றவர்களின் விசயங்களை மனதில் வைத்தால் அது மிகப்பெரிய மலையாகி விடும். அதைத் தகர்க்க வெடியை, தடியை நாட வேண்டியது வந்துவிடும். அதற்கு மற்றவர்களின் விசயத்தை மறக்க மனதிற்கு கற்றுக்கொடுப்பது நல்லது.



# அணு ஆயுதங்கள் அவசியமா?

பி.கு. செல்வநாதன், சென்னை

மனித வாழ்க்கையின் நோக்கத்தை உணராத மனிதன், அறியாமையிலும், ஆணவத்தாலும், குறுகிய கண்ணோட்டத்தாலும் இப்பூமியை மட்டுமல்ல வேறு எந்த ஜீவராசி களும் வாழ முடியாத சுடுகாடாக மாற்று வதற்கான ஒரு முயற்சியின் வெளிப்பாடே அணு ஆயுதங்கள்.

ஒரு நிமிடம் சிந்திப்போம். அன்று இந்த உலகத்திற்கு வரும்போது நீங்கள் பெற்றது என்ன? செழிப்பான பூமி, தூய்மையான காற்று, நீர், இனிமையான வசந்த காலம், அன்பும் அக்கறையும் கொண்ட மூதாதையர்கள், தர்மத்தை யும், வாழ்க்கை வழிநெறியையும் தெளிவு படுத்தும் வேதங்கள், இதிகாசங்கள். சுகமும், சாந்தியும் நிறைந்த வாழ்க்கை. ஆனால் இன்று நம்முடைய வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்கும் பொக்கிஷம் என்ன?

நில நடுக்கம், வறட்சி நிறைந்த பூமி, சுகாதாரமற்ற சுற்றுச்சூழல், குரோதமும், வெறுப்பும் நிறைந்த குடும்ப சூழல் மன உளைச்சலும், தனிமையும் நிறைந்த குழந்தைப்பருவம், பலவித மான புது புது நோய்கள், இயற்கைச் சீற்றங்கள்

இவை போதாது என மனிதனின் அபாரமான கண்டுபிடிப்பே ஒரு வகையில் முழு உலகத்தையே பல நூறு ஆண்டு களுக்கு சுடுகாடாக மாற்றும் ஆணு ஆயுதங்கள்.

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காண்பிக்க வேண்டும் என அன்பை போதித்த கிறிஸ்து. அகிம்சையை போதித்த புத்தர், காந்தி தன்னுடைய பாதிப்பைக் கண்டு கவலைப்படாமல் அடுத்தவர் வாழ வேண்டும் என சேவை புரிந்த மதர் தெரசா. இவ்வாறு அன்பினாலும் அகிம்சையாலும் இவ்வுலகை சுகமாக மாற்ற முயற்சித்த சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு ஒரு புறம் படித்துக் கொண்டு இருக்கும் நாம் மறு புறம் எந்த தவறும் செய்யாத முன்பின் அறியாத நம் வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாத, குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள் ஏன் மனித சமுதாயத்திற்கே மரண தண்டனை அளிக்கும் மனிதாபிமானமற்ற நீதிபதிகளே அணு ஆயுதங்களை உபயோகிக்கும் இன்றைய தலைவர்கள்.

ஒரு உயிரை படைக்க முடியாத மனிதனால் பல உயிர்களை காரணமற்று அழிப் பதற்கு என்ன உரிமை உள்ளது?

அக்காலத்தில் தன்னுடைய வீரத்தையும், பலத்தையும் நிரூபிக்க ஏற்பட்ட யுத்தங்களில் கூட பல நியமங்கள் இருந்தது. ஆயுதமற்ற எதிரியை தாக்குதல் கூடாது, பெண்களை தாக்குதல் கூடாது, புற முதுகில் தாக்கக் கூடாது. எதிரியை நேருக்கு நேர் நின்று தாக்கி தன்னுடைய வீரத்தை பிரத்யட்சப் படுத்த வேண்டும். ஏனெனில் அவர்கள் அழிவின் பாதிப்பை அடுத்தவரின் வலியை உணர்ந்து இருந்தனர். ஆனால் இன்றோ ஏதோ ஒரு இருட்டறையில் ஒளிந்து கொண்டு யாருக்கும் தெரியாமல் யாரை தாக்குகிறோம், என புரியாமல் எதற்காக இந்த யுத்தம்? கோழைகளின் ஆயுதமே அணு ஆயுதங்கள் எனக் கூறலாமா?

இதனால் நாம் எதையும் சாதிக்க போவதில்லை. இவ்வுலகத்தின் எழுதாத சட்டம்.

நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் எதிர் விளைவு உண்டு. அதை நாம் சந்தித்தே தீர வேண்டும் என்ற இந்த தத்துவத்தின் படி மனித உடல்கள் அழியும். ஆனால் உயிர்கள் அழிவ தில்லை. நாம் ஏற்படுத்தும் ஒவ்வொரு அழிவிற்கும் நாம் மீண்டும் மீண்டும் இப்பூமியில் பிறவி எடுத்து அதன் கர்ம பலனை பலவாறாக அனுபவித்தே தீர வேண்டும். இதுவே இயற்கையின் நியதி. இவ்வுண்மையை உணராமல் யார் அழிந்தால் எனக்கென்ன என்று உணராமல் இதே இடத்தில் தான் நான் மீண்டும் அங்க ஹீனமுடையவனாக, மூளை வளர்ச்சி குன்றியவனாக, மன நலமும், உடல் நலமும் பாதிக்கப்பட்டு இயற்கை வளங்களில் அழிந்த பூமியில் வாழ்நாள் முழுவதும் நோய்களினால் துக்கப்பட்டு வாழ்வதற்கான ஒரு பூமியை எனக்கு நான் தயார் செய்து கொண்டு இருக்கிறேன் என்பதை உணர்வேனாக!

**அழிப்போம் ஆணவத்தை -**
**தவிர்ப்போம் அணு ஆயுதத்தை.**

ஒரு புறம் தான் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலேயே மிக கொடியது என உணர்ந்த அறிவியல் விஞ்ஞானி நோபலின் பெயரிலேயே அமைதிக்கான பரிசை அளித்துக் கொண்டு மறுபுறம் அவருடைய கண்டுடிப்பையே முறை தவறி உபயோகித்துக் கொண்டுமிருக்கும் மானிட மாமேதைகளை தலைவர்கள் என்னவென்று கூறுவது.

## நீ விதைத்த வித்து நான்.... *பி.கு. பூபதி, மேட்டூர்*

விதைப்பதெல்லாம் முளைப்பதில்லை
முளைப்பதெல்லாம் வளர்வதில்லை
வளர்வதெல்லாம் பூப்பதில்லை
பூப்பதெல்லாம் காய்ப்பதில்லை
காய்ப்பதெல்லாம் கனிவதில்லை


பண்பட்ட நிலமாய்ப் பார்த்து
நீ விதைத்த வித்து நான்
அனு தினமும் ஞான நீரூற்றி
நீ பார்க்க நான் முளைத்தேன்

ஊனோடு கலந்த உன் ஞானத்தால்
தேனாடைபோல் நான் வளர்ந்தேன்
பனை மரம் பூத்தது போல்
உன் அறிவால் நான் வளர்ந்தேன்
தென்னங்குலை காய்ப்பது போல்
நான் காய்த்து குளிர்ச்சி தந்தேன்
எண்ணமெலாம் கனிந்து உந்தன்
பொன்னடியில் தவமிருந்தேன்

உன்னுயிரில் கலந்து விட்ட ஒளிச்சுடரே
உன் மடியில் கனிந்து நான்
விழுந்து விட்டேன்

சுவைத்துத்தான் பார்த்தாயா?
சுவை தானா? சுவையான
கனி நானா, சொல் பாபா!

**ஐயா! பரம தந்தையே! விஷக்கடலிலேயே நீந்தி, அந்த விஷமே அமிர்தமென நினைத்த என் அறியாமையை நீக்கி, மெய்யான பாற்கடலில் இப்போது எம்மை நீந்தவிட்டு, அதிலே நான் உண்மையான சுகத்தை அனுபவிக்கும்போது உன் கருணையை நினைந்து நினைந்து அன்புக் கண்ணீர் சுரக்குதய்யா!**



# மலரும் நினைவுகள்

இராஜயோகி இரமேஷ்ஷா, மும்பை
(தமிழாக்கம்)

நாம் நமது வாழ்க்கையில், செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் சிரத்தையுடன், அன்புடன், திட நம்பிக்கையுடன் செய்யும்போது வெற்றி என்பது நிச்சயமாகக் கிடைக்கும்.. நான் எனது இளம் பிராயத்தில் கதை ஒன்று படித்தேன். ஒரு சமயம் கிராமத்தில் பருவ மழை பொய்த்துப் போனதால் பூமி வறண்டு போனது. இதனால் பஞ்சம் உண்டானது. துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருந்த கிராம மக்கள் ஒரு நாள் ஒன்று கூடி மழைக்காக யக்ஞம் செய்யலாம் என்று தீர்மானித்தார்கள். அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடக்க ஆரம்பித்தது, வெகு சீக்கிரமாகவே யக்ஞம் ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது. மக்கள் எல்லோரும் அங்கே ஒன்று கூடி இருந்தார்கள். அந்த சமயத்தில் வயதான பெரியவர் ஒருவர் அங்கு கையோடு குடை ஒன்றும் கொண்டு வந்திருந்தார். இதைப் பார்த்த அனைவரும் சிரித்தார்கள். மழைக்காக இப்போது தான் யக்ஞ குண்டம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். இவரைப் பாருங்கள் இப்போதே குடையை கையோடு கொண்டு வந்து விட்டார் என்று பேசிக் கொண்டனர். இவர்களில் ஒருவர் அந்தப் பெரியவரைப் பார்த்துக் கேட்டபோது, அவர் சொன்னார் நாம் யக்ஞம் வளர்த்து பூஜையும் செய்து கொண்டிருக்கிறோம். இங்கிருந்து திரும்பிப் போகும் முன் மழை வரும். அப்போது குடைக்கு எங்கே போவது என்றார். மேலும் அந்த பெரியவர் அவர்களிடம் கூறினார் நீங்கள் செய்கின்ற காரியத்தில் உங்களுக்கே நம்பிக்கை இல்லை என்றால், நினைப்பது எப்படி நிறை வேறும்? எப்போது எல்லோருமாகச் சேர்ந்து முழு நம்பிக்கையோடு, சிரத்தையோடு காரியங்கள் செய்கிறோமோ அப்போது தான் வெற்றி கிடைக்கும் என்றார்.

இது மாதிரி, சாஸ்திரங்களில் உதாரணங்கள் உண்டு. ஒரு அரச சபையில், பண்டிதர் ஒருவர் இருந்தார். அவரைப் பார்த்து ராஜா சொன்னார், வேதங்கள் ஓதுவது முலமாக அதிசயம் நடக்குமா? இதற்கு பண்டிதர் ஆம் மகாராஜா, அதிசயம் நிச்சயம் நடக்கும் என்றார். இதைக் கேட்ட ராஜா, அப்படியானால் பண்டிதரே நீங்கள் நான்கு மாடி வீட்டிலிருந்து கீழே குதிக்க வேண்டும். உங்களுக்கு ஆபத்து எதுவும் இல்லை என்றால் நான் நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். பண்டிதர் இராஜாவின் சொற்படி மேலிருந்து கீழே குதித்தார். அவரது இரண்டு கால்களும் முறிந்து விட்டது. இதன் காரணமாக வேதங்கள் ஓதுவதால் அதிசயம் நடக்கும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டார். பிறகு பகவானை நினைத்து பிரார்த்தனை செய்தார். பகவானிடம், எனக்கு ஏன் இந்த கதி உண்டானது என்று கேட்டார். இதற்கு அப்போது அசரீரி வாக்கு ஒலிப்பது பண்டிதருக்கு கேட்டது. பண்டிதரே நீங்கள் மாடியிலிருந்து குதிப்பதற்கு முன்பாக என்னிடம் என்ன சொன்னீர்கள்? பகவானே வேதங்கள் ஓதுவதால் அதிசயம் நடக்கும் என்றால், எனக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்று வேண்டுதல் செய்தீர்கள் அல்லவா? இதன் பொருள் இதில் உங்களுக்கு பூரண விசுவாசம் இல்லை என்றாகிறதல்லவா? உங்கள் மனதில் இந்த சந்தேகம் இருந்த காரணத்தாலேயே அதிசயம் நடக்கவில்லை. உங்கள் கால்களிலும் முறிவு ஏற்பட்டுவிட்டது. இதன் மூலம் எந்த ஒரு காரியம் செய்தாலும் அதை

சிரத்தையுடனும், முழு நம்பிக்கையுடனும் செய்ய வேண்டும் என்பது உறுதியாகிறது.

அன்பான பாபாவின் ஒவ்வொரு ஈஸ்வரிய காரியத்திலும் எப்போதும் வெற்றி தான். எனினும், எதுவரையிலும் பூரண நிச்சயம் இல்லையோ, அதுவரையிலும் காரியம் முழுமையாக முற்றுப்பெறுவதில்லை. யக்ஞத்தின் ஆரம்ப காலத்தில் சிவபாபா தனியாகவும், பிரம்மா பாபா தனியாகவும் இருந்தார்கள். இதை உறுதி செய்வதற்காக சிவபாபா வேறொரு ரதத்தை ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அவரது பெயர் தாதி புஷ்பமணி. இவரது உடலில் சிவபாபா தொடர்ந்து 15 நாட்கள் வந்து கொண்டிருந்தார். ஒரு நாள் தாதி புஷ்பமணி கட்டிலில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். வெளியே அடுத்த அறையில் மாதேஷ்வரி அவர்களும், தீதி மன்மோகினி அவர்களும் பேசிக் கொண்டிருந்தார் கள்? பேசிக் கொண்டே தாதி புஷ்பமணி உடலில் வருவது யாராக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் சிவபாபா தாதி புஷ்பமணி அவர்களின் உடலில் பிரவேசமாகி விட்டார். அவர் (தாதி புஷ்பமணி) வெளியிலிருந்த அறைக்கு வந்து பேசிக் கொண்டிருந்த இருவரிடமும் கேட்டார்? நான் யாரென்று உங்களுக்கே புரியவில்லை என்றால், மற்றவர்களுக்கு எப்படி புரிய வைப்பீர்கள். உங்களுடைய மனதில் சிவபாபா மற்றும் பிரம்மா பாபா ஒருவரா அல்லது தனிப்பட்டவரா என்ற சந்தேகம் இருந்ததல்லவா? இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காகவே நான் தாதி புஷ்பமணி அவர்களின் உடலை ஆதாரமாக எடுத்தேன் என்று சிவபாபா கூறினார். மேலும் நான் வருங்காலத் திட்டம் பற்றி உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் எது வரையிலும் உங்களுக்கு இதில் நம்பிக்கை வரவில்லையோ, அதுவரையிலும் உங்களிடம் இத்திட்டம் பற்றி என்ன சொல்ல முடியும்? இதைக்கேட்ட மாதேஷ்வரி மற்றும் தீதி மன்மோகினி இருவரும் சிவபாபாவிடம் உடனே மன்னிப்பு கேட்டனர். இவர்களிடம் இத்தகைய நிச்சயம் வந்து விட்டதால், யக்ஞத்தில் இருந்த மற்ற குழந்தைகளுக்கும் நிச்சயம் உண்டாகி விட்டது. யக்ஞ சம்மந்தமான எல்லாக் காரியங் களையும் நம்பிக்கையுடன் செய்ய ஆரம்பித்தனர். இதன் பொருள் எதுவரையிலும் பூரண விசுவாசத்துடன் சேவை செய்யபடுவ தில்லையோ அதுவரையிலும் செய்கின்ற சேவையில் வெற்றி என்பது நிச்சயமில்லை என்பது தான்.

ஒரு சமயம் நான் அபுவில் இருந்தேன். மாதேஸ்வரி அவர்கள் டெல்லி மற்றும் இதர பகுதிகளில் சேவை செய்து விட்டு அபு வந்தார். அப்போது சில இடங்களில் நடக்கும் எதிர் பார்ட்டியினரின் பிரச்சனைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆதலால் இப்படிப்பட்ட பகுதிகளில் எப்படி சேவை செய்வது என்ற எண்ணம் உண்டானது. நான் பிரம்மா பாபாவிடம் சென்று இந்த மாதிரியான சூழ்நிலையில் சேவை எப்படி நடக்கும்? இது பற்றி தங்களுக்கு சந்தேகம் வரவில்லையா? என்று கேட்டேன். இதற்கு பிரம்மா பாபா கூறினார். எனக்கு டிராமா மீது முழு நம்பிக்கை இருக்கிறது. 5000 ஆண்டு களுக்கு முன் யக்ஞ ஸ்தாபனை காரியம் எப்படி நடந்ததோ அதே மாதிரியே இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகையால் எனக்கு ஒரு போதும் சந்தேகம் வந்ததில்லை. ஒவ்வொரு காரியத்தின் வெற்றியும் ஏற்கனவே நிச்சயிக்கப் பட்டுவிட்டது என்ற பதிலைக் கேட்டு எனக்கும் கூட அன்று முதல் டிராமா மீது முழு நம்பிக்கை உண்டாகி விட்டது.

நாங்கள் 1971ம் ஆண்டு வெளிநாட்டு சேவையின் நிமித்தம் புறப்பட்டுச் செல்வதற்கு முன் தாதி ஷீல் இந்திரா, ஜகதீஷ்பாய், டாக்டர் நிர்மலா, ரோஸிபகன், உஷாஜி மற்றும் நான் ஆகிய ஆறு பிரதிநிதிகள் மதுபன் வந்திருந் தோம். விடை பெறுவதற்காக பாபாவிடம் சென்றோம். அப்போது எங்களிடம் அவ்யக்த

பாப்தாதா கூறினார். குழந்தைகளே! உங்கள் சேவைக்காக அங்கு எல்லா ஏற்பாடுகளும் தயாராகவே இருக்கின்றது. ஸ்விட்ச் ஆன் செய்வதற்கு எவ்வளவு முயற்சி அவசியமோ அவ்வளவு தான் நீங்கள் செய்ய வேண்டிய தாயிருக்கும் என்றார். நாங்கள் பாப்தாதா விடமிருந்து விடை பெற்றோம். பிறகு நாங்கள் ஒவ்வொருவரும் தலா 6 டாலர் மட்டுமே கொண்டு செல்வதற்கான அனுமதி இந்திய அரசு வழங்கியிருந்தது. நாங்கள் பாபாவின் ஸ்ரீமத்படி பூரண நம்பிக்கையுடன் உலக சேவையின் நிமித்தம் புறப்பட்டோம். எப்போது மும்பை யிலிருந்து விமானம் முலமாகப் புறப்பட்டோமோ, அப்போது விமானப் பெண்மணி எங்கள் எல்லோருக்கும் ஹெட்போன் கொடுத்தார். இதற்கு விமானப் பெண்மணி 3 டாலர் கேட்டார். ஜகதீஷ் சகோதரர் கேட்டார் ஏதாவது பாடல் களைக் கேட்கலாமா என்று கேட்டார். நம்மிடம் 6-6 டாலர்கள் மட்டுமே இருக்கின்றது. இதில் பாட்டுக் கேட்பதற்காக 3 டாலர் கொடுத்துவிட்டால், மீதமுள்ள 3 டாலர்களைக் கொண்டு மற்ற காரியங்களை எப்படிச் செய்ய முடியும் என்றேன்.

எப்போது நாங்கள் பிரஸ்ஸில்ஸ் நகர் வந்தடைந்தோமோ அங்கு இரண்டு ஆண்டு களுக்குமுன் இன்டர் நேஷனல் யோகா மாநாடு நடந்திருந்தது. அந்த சமயம் அப்போது சந்தித்தவர்களைச் சந்தித்தோம். அங்கிருந்து லண்டன் சென்றோம். லண்டனில் அதிக சேவை இருந்ததால் எங்களில் 4 பேர் தங்க வேண்டிய தாயிற்று. மீதமுள்ளவர்கள் நான் மற்றும் டாக்டர் நிர்மலா இருவரும் நியூயார்க் சென்றோம். அங்கு எனது நண்பர் ஒருவருடைய வீட்டிற்குச் சென்றோம். அங்கு வோஸ்டிங் ரிட்ரீட் மாநாட்டில் பங்கு பெற வேண்டியதாகயிருந்தது. நாங்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து மாநாடு நடைபெறும் இடம் 180 மைல் தூரத்தில் இருந்தது. எனது நண்பர் எங்களை அங்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடும் நடக்கும் என்று சிவபாபாவின் மீது நம்பிக்கை வைத்தேன். அங்கு எதிர்பாராத விதமாக ஒருவர் எங்களைச் சந்தித்தார். மும்பை மாநாட்டில் சந்தித்தாகவும், இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அழைப்பும் விடுத்ததாகத் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். இங்கு மாநாடு முடிந்ததும் எங்களை அவர் அழைத்துச் சென்று நாங்கள் தங்கியிருந்த வீட்டில் கொண்டு சேர்த்து விட்டார். அங்கு கண்காட்சி நடத்து வதற்காக ஹால் தேடுவதிலும் அவர் எங்களுடன் நான்கு நாட்கள் தங்கியிருந்து உதவியாயிருந்தார். ஒரு இடத்தில் (ஹால்) கண்காட்சி நடத்த வேண்டு மென்று அங்கிருந்த பெண்மணியிடம் கேட்டோம். எத்தனை நாட்கள் ஹால் தேவைப் படும் என்று அவர் கேட்டார். 11 நாட்கள் தேவைப்படும் என்று சொன்னபோது ஒரு நாள் வாடகை 300 டாலர் என்று சொன்னார். எங்களிடம் இருந்ததோ 10 டாலர் மட்டுமே தான். பிறகு அந்தப் பெண்மணி எங்களிடம் கண்காட்சி பார்க்க வருபவர்களிடம் நீங்கள் எவ்வளவு டாலர் வசூலிப்பீர்கள் என்று கேட்டார். இதற்கு நாங்கள் இங்கு ஈஸ்வரிய சேவை செய்ய வந்திருக்கிறோம் ஆகையால் யாரிடமிருந்தும், எதுவும் வசூல் செய்ய மாட்டோம். இலவசமாகவே தான் சேவை செய்கிறோம். எங்கள் சிவபாபா யாரிடமிருந்தும் பணம் பெறுவதைக் கற்பிக்கவில்லை. நீங்கள் வள்ளலின் குழந்தைகள் ஆதலால் யாரிட மிருந்தும் எதுவும் வாங்கக்கூடாது என்று கூறியிருக்கின்றார் என்றோம். இதைக் கேட்ட அந்த பெண்மணி நீங்கள் இலவசமாகவே சேவை செய்கிறீர்கள் என்றால் நான் எப்படி உங்களிடம் வாடகை கேட்க முடியும். உங்களிடமிருந்து வாடகை பெற்றால் எங்கள் தேசத்தின் கௌரவம் என்னாவது? என்று சொல்லிவிட்டு சாவியை எங்களிடம் கொடுத்து விட்டு நீங்கள் எத்தனை நாள் சேவை செய்ய விரும்புகிறீர்களோ அத்தனை நாள் செய்யலாம் என்று அனுமதி அளித்து விட்டார். பிறகு எங்களுக்கு டெபிள் தேவைப்பட்டது, பர்னிச்சர் ஷாப் சொந்தக்காரரிடம் தொலை பேசியில்

கேட்டபோது மேஜை ஒன்றுக்கு ஒரு நாளைக்கு வாடகை ஒரு டாலர் என்றார். பிறகு அவரை நேரில் சென்று விஷயத்தைச் சொன்னபோது அவரும் எங்களுக்கு வேண்டிய டேபிள், டேபிள்கிளாத் அனைத்தையும் இலவசமாகவே கொடுத்தார். பிறகு அழைப்பிதழ் அச்சடிக்க பிரிண்டிங் பிரஸ் சென்றோம். அங்கு 500 கார்டு பிரிண்ட் செய்ய 9 டாலர் கேட்டார். இலவசமாக செய்து கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆதலால் 9 டாலர் கொடுத்தோம்.

அடுத்த நாள் அமிருத வேளையில் பாபாவிடம் அவசியமான எல்லா சேவைக்கும் இலவசமாகவே ஏற்பாடுகள் நடந்து விட்டது. ஆனால் பிரிண்டிங் செலவு இலவசமாக ஏன் கிடைக்கவில்லை என்று கேட்டபோது பாபா கூறினார் குழந்தைகளே உங்களுக்கு அவசிய மான அனைத்தும் ஈஸ்வரிய சக்தி முலம் நடந்து விட்டது. நீங்கள் இதுவரையிலும் செய்த சேவைக்கான ஏற்பாடுகளுக்கெல்லாம் பணம் கொடுக்க வேண்டியிருந்தால் எவ்வளவு செலவு ஆகியிருக்கும். இந்த அனுபவம் வேண்டு மென்பதற்குத்தான் இப்படி நடந்தது என்றார்.

இதன் பிறகு லண்டனிலிருந்து 4 பிரதிநிதிகளும் இங்கு வந்து சேர்ந்துவிட்டனர். கண்காட்சி மிகச்சிறப்பாகவே நடந்து முடிந்தது. இவ்விதமாக வெற்றி நம் பிறப்புரிமையாகி விட்டது. என்றாலும் பரமாத்ம தந்தையின் மீது திட நம்பிக்கை அவசியமாயிருக்கிறது என்பது புரிந்தது. ஆதலால் ஈஸ்வரிய சேவையின் போது இது பரமாத்மாவின் காரியம் என்பதில் பூரண விசுவாசம் இருக்க வேண்டும். நாம் நிமித்தமாகி காரியம் செய்கிறோம் என்பதிலும் நம்பிக்கை இருக்க வேண்டும்.

பாபாவின் ஸ்ரீமத்படி பாபாவின் சித்தாந்தத்தை லௌகீக உலக காரியங்களிலும் உபயோகம் செய்வோமேயானால் அதிலும் வெற்றி நிச்சயம் உண்டாகும். பாபா குழந்தை களின் இம்மாதிரியான அனுபவங்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. இந்த அனுபவங்களை ஒன்று சேர்த்தால் ஒரு பெரிய புத்தகமே தயராகி விடும். யாரெல்லாம் பாபாவிடம் இந்த மாதிரி திட நம்பிக்கைகொண்டு சேவையில் வெற்றி அடைந்தார்களோ, அவர்கள் அனைவருக்கும் எனது கோடான கோடி வணக்கம்.

## சகிப்புத்தன்மையின் சிறப்பு

### உண்மையின் சக்தியை உணர்கின்றவர் யாரோ அவரே பொறுமைசாலி

உதாரணமாக, என்மீது இவருக்கு நம்பிக்கையே இல்லை என்று நினைக்கிறோம். அப்போது அவரோடு வாக்குவாதம் செய்ய ஆரம்பிக்கிறோம். பேச்சு தொடரும். சாரமில்லாமலும் போய்விட்க்கூடும். இவ்வாறு எவ்வளவு நேரமானாலும், மற்றவர் கவனத்தை ஈர்க்கப்போவதில்லை எனினும் சூழ்நிலையை புரிந்து கொள்ளும் போது பேச்சு தானாகவே நின்று விடும். அமைதி நிலவும்.

இன்னொன்று நான் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும்போது என்ன நடந்தது என்ற விவரம் கூறுகிறேன். அவர் உடனே நீங்கள் கூறுவது சரியல்ல என்று மறுக்கிறார். பிடிவாதமாகவும் இருக்கிறார். அப்போது நான் எப்படி நடந்து கொண்டால் சரியானதாக இருக்கும்?

அப்போது நான் சொல்வதே சரி என்று அடம் பிடிக்காமல் மற்றவர் மறுப்புக்கு என்ன காரணம் என்பதையும் செவிமடுத்து அதைப்பற்றி சிந்திக்க முற்பட வேண்டும். எது சரி என்ற உண்மையைப் புரிந்து கொள்ள இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முடிவாக, ஒருவேளை தனது எண்ணம் எதுவோ, அதுவே உண்மையில் சரியானது என்று தெரிந்தாலும் கூட மற்றவர் சொல்லுக்கும் உடனே மறுப்புத் தெரிவிக்காமல், கோடப்படாமல இருந்தால் அது சகிப்புத் தன்மை எனலாம்.



# சுட்டி - படு சுட்டி

**சுட்டி:** அண்ணே! வணக்கம்.

**படுசுட்டி:** வாங்க தம்பி, வணக்கம். உட்காருங்க தம்பி. அப்புறம் என்ன விசேஷம்? நீங்க விவசாயத்துலே அனுபவசாலி. இந்த வருஷம் எப்படி மகசூல் நல்லா இருக்குமில்லையா?

**சுட்டி:** ஆமாண்ணே! மழையும் பேஞ்சிருக்கு. வெளச்சலும் நல்லா இருக்கும் ‘‘னு’’ தா தோணுது. பராயில்லே.

**படுசுட்டி:** சரி தம்பி. சந்தோஷம். வேறென்ன விசேஷம்?

**சுட்டி:** அண்ணே! இப்ப எங்கே பாத்தாலும் விஞ்ஞானத்தைப் பத்தியும், மதத்தைப் பத்தியும் தான் பேசிக்கிட்டிருக்காங்க. இதுலே அப்படி என்ன இருக்கு?

**படுசுட்டி:** தம்பி. இந்த ரெண்டுமே விசேஷமானது தான். ஒன்னு ரெம்ப நாளா இருக்கு. இன்னொன்னு அதுக்கப்பறம் வந்திருக்கு. ரெண்டுமே பெரிய சக்திகள் அப்படீன்னு தான் சொல்லனும்.

**சுட்டி:** நீங்க சொல்றாப்புலே பெரிய சக்திகள் நம்மகிட்ட இருக்குன்னு சொன்னா, ஜனங்க சந்தோஷமா இருக்கிறாப்போல தெரிய வில்லையே, அது ஏன்? போராட்டமும், நோயும், நொடியுமாகத்தானே இருக்கண்ணே.

**படுசுட்டி:** அது ஒண்ணுமில்லே தம்பி. விஞ்ஞானம் உடலுக்கு ஸ்தூல ரீதியா ஆறுதலைத் தந்திருக்கனும். மதம் உடலுக்கு உள்ளே இருக்கிற உயிருக்கு ஆறுதலைத் தந்திருக்கணும். ஆனா, ரெண்டும் நிறைவேறலே ‘‘ன்னு’’ தான் சொல்லனும்.

**சுட்டி:** இதுக்கு என்ன காரணம்?

**படுசுட்டி:** இதுலே இரகசியம் ஒண்ணுமில்லே தம்பி. விஞ்ஞானமும் மதமும் தனித்தனியா இருந்தாலும் சண்டைபோடச் சொல்லலே, அழிஞ்சு போகச் சொல்லலே. ரெண்டுக்கும் பொதுவான சித்தாந்தம் **ங்கிறது** ஒன்னு தான். அதாவது எல்லோரும் சந்தோஷமா இருக்கனும் **ங்கிறது** தான், இதை நாம புரிஞ்சுக்கலே,.

**சுட்டி:** அண்ணே! நாம இதை சரியா பயன் படுத்தலே ‘‘னு’’ சொல்றீங்க. அப்படித்தானே?

**படுசுட்டி:** ஆமா தம்பி. மனுஷன் மனுஷனா இருக்கிற வரைக்கும் அன்பா இருந்தாங்க. இன்னிக்கு சுபாவம் எப்படி இருக்கு?

**சுட்டி:** இப்படியே போனா, நெலமை என்னாகும்?

**படுசுட்டி:** நீங்க நினைக்கிறமாதிரி நெலமை கட்டுப்பாட்டுலே இல்லேங்கிறது நிச்சயமாத் தெரியுது. இருந்தாலும் இதுக்கும் ஒரு வழி இருக்கத்தான் செய்யும் தம்பி.

**சுட்டி:** அண்ணே! நீங்க என்ன சொல்றீங்க. சொல்றதைப் பார்த்தா தெய்வமே துணை, அப்படியா?

**படுசுட்டி:** சரியாச் சொன்னீங்க தம்பி. கருணை உள்ளவர் கடவுள் ‘‘னு’’ சொல்றோமில்லியா. அதுனாலே நமக்கு இருக்க வேண்டிய நம்பிக்கை இப்போ இது ஒன்னு தான்.

**சுட்டி:** நம்பிக்கை இருந்தா மட்டும் போதும் ங்கிறீங்களா?

**படுசுட்டி:** எப்போ நாம செய்யறது தவறு ங்கிற உணர்வு வருமோ, வேற வழியில்லேங்கிறதும் புத்தியிலே எப்ப படுமோ அப்ப நம்பிக்கை வந்திரும்.

**சுட்டி:** அப்போ, எல்லோருக்கும் நம்பிக்கை வந்திரும் ங்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கு, சரிதானே.

**படுசுட்டி:** அப்படீன்னா தம்பி உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? இளமையாயிருக்கும் போது எப்படியெல்லாம் பேசுறோம் நடக்கிறோம்

அப்படி வயசான காலத்துலே முடியுதா? ஏன் இல்லே. அனுபவம் தான்.

**சுட்டி:** அப்போ அனுபவம் மாத்திடும் **ங்கிறீங்க**

**படுசுட்டி:** ஆமா தம்பி. சிலருக்கு நம்பிக்கை கருவுலேயே இருக்கும். சிலருக்கு நம்பிக்கை அனுபவத்துலே வரும். இன்னும் சிலருக்கு காலம் தான் உணர்த்தும்.

**சுட்டி:** அப்போ அண்ணன் சொல்றாப்போல எல்லோருமே உணர்ந்துடுவாங்க. அப்படித்தானே இல்லே உங்க அபிப்பிராயம் வேறென்னா, சொல்லுங்க.

**படுசுட்டி:** வேறென்னானு சொன்னா, தம்பி முன் கூட்டி உணர்ந்தவங்க தங்களை நல்லபடியா மாத்திக்கிட்டு, துன்பம் வந்தாலும் கவலைப் படமாட்டாங்க. கடைசி காலத்துலே கட்டாயத்தின் பேர்ல உணர்றவங்களுக்கு தங்களை மாத்திக்கிறனும்“னு” நெனச்சாலும் நேரமிருக்காது தம்பி. துன்படட வேண்டியதிருக்கும்.

**சுட்டி**:அதாவது இப்பவே உணரனும் அன்பாயிருக்கனும் அப்ப தான் வாழ்க்கையிலே சந்தோஷம் இருக்கும் “னு” சொல்றீங்க,

**படுசுட்டி:** ஆமா தம்பி. ஆனா, மனசுல கல்மிஷம் இருக்கிற வரைக்கும் அன்பு எப்படி வரும்? மொதல்ல மனசு சுத்தமாகனும். கோபம், பொறாமை, வெறுப்பு, வீறாப்பு எல்லாமே மனசுலே இருக்கக்கூடாது. மனசை சுத்தம் பண்ணனும்.

**சுட்டி:** இதெல்லாம் யார்கிட்டே இல்லே. எல்லார்க் கிட்டேயும் இருக்கத்தானே செய்யுது. அப்படி யிருக்க விலக்க முடியுமா?

**படுசுட்டி:** தம்பி. மொதல்ல இதைப் புரிஞ்சுக்கனும். அதாவது இதெல்லாம் மனுஷனோட சுபாவம் இல்லேங்கிறதை உணரதனும். ரெண்டாவது இதுனாலே துன்பந்தான், இதையும் நல்லா தெரிஞ்சுக்கிறது நல்லது. இதெல்லாத்தையும் விட்டா தான் நன்மைங்கிறதையும் புரிஞ்சுக் கிறனும்.

**சுட்டி:** இப்படி ஒவ்வொருத்தரும் மாறுறது தான் எல்லாத்துக்கும் நன்மைங்கிறீங்க. வாஸ்தவம் தான்.

**படுசுட்டி:** மனுஷனாலதான் உலகம் கெட்டது. அப்போ மனுஷனாலே தான் உலகம் நல்ல தாகவும் ஆகனும். முடியுமா? முடியாதா?

**சுட்டி:** அண்ணே நீங்க சொல்றாப்போல முடியும் “னு” சொல்ல முடியும். நல்லா சொன்னீங் கண்ணே.

**படுசுட்டி**: தம்பி நாம பொதுவா என்ன சொல்றோம். இப்பத்தான் இவ்வளவு மோசமா இருக்கு. முன்னெல்லாம் இப்படி இருக்கலே “னு” சொல்றோமில்லே. அப்போ இதுக்கு முந்தி நல்லா இருந்தது “ன்னு” சொன்னா அதுக்கும் முந்தி இன்னும் நல்லா இருந்திருக்கனும் இல்லையா?

**சுட்டி:** அதாவது இப்ப நடக்கிறாப்போல பாவ காரியங்கள் இதுக்கு முந்தி நடக்கலே ன்னு புரியுது. அப்படீன்னா, நல்லா இருந்தவங்க தான் இப்போது இப்படி மாறிட்டாங்கன்னு நினைக்க வேண்டியதா இருக்கு.

**படுசுட்டி:** ஆமா தம்பி, அதுனாலே நாம தான் முந்தி இருந்தாப்போல நல்லவங்களா, புண்ணியவான்களா மாறனும். இப்படி ஆகத்தான் வேணும் “கிறது” முக்கியம். அப்புறம் அப்படி ஆக முடியும்“ங்கிற” நம்பிக்கையும் வேணும். முயற்சியும் பண்ணனும். இன்னைக்கிருக்கிற நெலமையும் இப்படியே நிரந்தரமாக இருக்கப் போறதில்லே.

**சுட்டி:** அண்ணே நல்லபடியா மாறிடும் “னு” சொல்றீங்க. நல்ல சேததி தான். கேட்க ரெம்ப சந்தோஷமா இருக்கு.

**படுசுட்டி:** சந்தேகமே வேணாம் தம்பி. மாறத்தான் போகுது. கண்டிப்பா மாறும்.

**சுட்டி:** சந்தேகம் இல்லண்ணே. வணக்கம். புறப்பட றேன்.

**படுசுட்டி:** சரி தம்பி. வணக்கம்.

# அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தொலைத்தூரக் கல்வி இயக்ககம்

தொழில் நுட்ப ஒருங்கிணைப்பில்

**பிரம்மா குமாரிகள்**

கல்விப்பிரிவு, இராஜயோகக் கல்வி & ஆராய்ச்சி அறக்கட்டளை

## மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மீகத்திற்கான பாடங்கள்

Self Management & Crisis Management

| DIPLOMA | PG DIPLOMA | M.Sc | MBA |
|---|---|---|---|
| பட்டயம் | முதுநிலைப்பட்டயம் | முதுநிலைப்பட்டம் | முதுகலை வணிக நிர்வாகம்(சுய மேலாண்மை & இடர் மேலாண்மை) |
| இந்தி, ஆங்கிலம், தமிழ், கன்னடம், ஒடியா, குஜராத்தி, மலையாளம், தெலுங்கு | இந்தி,ஆங்கிலம், தமிழ், கன்னடம், ஒடியா, குஜராத்தி, மராத்தி, மலையாளம்,தெலுங்கு, நேபாளி | இந்தி,ஆங்கிலம், தமிழ், கன்னடம், ஒடியா, குஜராத்தி, | ஆங்கிலம் |
| +2அல்லது சமமானது | ஏதாவது பட்டப்படிப்பு அல்லது சமமானது | ஏதாவது பட்டப்படிப்பு அல்லது சமமானது | ஏதாவது பட்டப்படிப்பு அல்லது சமமானது |
| ஓராண்டு | ஓராண்டு | ஈராண்டு | ஓராண்டு |
| 5 நாட்கள், குறைந்த பட்சம் 4 நாட்கள். | 10 நாட்கள் குறைந்த பட்சம் 8 நாட்கள். | 10 நாட்கள் குறைந்த பட்சம் 8 நாட்கள். | 10 நாட்கள் குறைந்த பட்சம் 8 நாட்கள். |
| Rs.2500/- | Rs.4500/- | 1st yr : Rs. 4500/-<br>2nd yr : Rs. 7000/- | 1st yr : Rs. 14500/-<br>2nd yr : Rs. 14000/- |

**முதுநிலைப்பட்டம்(Lateral entry-one year) :** மதிப்புணர்வுக்கல்வி & ஆன்மீகத்தில் பட்டயம் பெற்றவர்களுக்கு **(PGVE&S)** மட்டும் (ரூ 8500)

3 ஆண்டுகளுள் முடிக்க வேண்டும். சேர்க்கை : தகவலோடு இணைந்து விண்ணப்பப்படிவம் பிரம்மாகுமாரிகள் நேர்முகத் தொடர்பு வகுப்பு மையங்கள் அல்லது மதுரை செயல்திட்ட இயக்குனர் அலுவலகத்தில் பெறலாம். அ) ரூ 100/- நேரடியாகச் செலுத்தி ஆ) தபால் மூலம் என்றால் சென்னையில் மாற்றத்தக்க The Director. DDE, Annamalai University என்ற பெயரில் ரூ 150/- (For MBA 290/- )க்கான வரைவோலை மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**Dr. B.K. பாண்டியமணி**
இயக்குனர், மதிப்புணர்வுக் கல்வி
நிகழ்ச்சிகள், மவுண்ட் அபு.
அலைபேசி : +91 94141 53090, 94422 22157

**இராஜயோகி B.K. மிருத்துஞ்சயா**
துணைத் தலைவர், இராஜயோக
கல்வி,ஆராச்சி ஆறக்கட்டளை

**AU Nodal Office**
பிரம்மா குமாரிகள் **'விஷ்வ சாந்தி பவன்'**
36, மீனாட்சி நகர், P & T நகர் பின்புறம்,
மதுரை -625 017. Fax: 0452-2640666,
Mobile : +91 94422 68660 / +91 94141 52522
Email : valueeducationmadurai@gmail.com
Web site : www. bkvalueeducation.in



**New Courses**
**B.Sc. in VES**
**PG Diploma** in
Counseling &
hypnotherapy

**ADMISSION OPEN : சேருவதற்கான கடைசி நாள் : நவம்பர் 30, 2015**

# நாடகத்தின் மறுபக்கம் பற்றி ஒரு சிந்தனை



எல்லையில்லா இவ்வுலக நாடக மேடையில் நடைபெறும் மகாலீலையின் காட்சியை நாம் காண்கிறோம். நாடகத்தின் பாத்திரமான நடிகர்கள் அனைவரும் மேடையின் திரைச்சீலைக்குப் பின்புறம் ஏற்கனவே வந்து விட்டனர். மேடையில் யார் எப்பொழுது என்ன வாக நடிக்க வேண்டும் என்பது முறைப்படி நடக்கிறது. தீர்மானிக்கப்பட்ட வேறு வேடத்தில் நடிப்பதற்கு தயார் செய்வதற்காக மீண்டும் திரைக்குப் பின் நடிகர் செல்கின்றார். ஆரம்பகால முதலே நடிப்பில் ஆர்வம் கொண்டு அநேகவித கரடு முரடான, மென்மையான அனுபவங்களை வாழ்க்கையில் சந்திக்கின்றனர். பழிக்குப்பழி, வஞ்சகம், ஏற்றம், இறக்கம், ஆக்கல், அழித்தல் ஆகியவற்றை அறியாமல் எத்தனை கதைகள், எத்தனை யாத்திரைகள் இவற்றின் நினைவில் மனம் அலை பாய்ந்து கொண்டிருக்கிறது. சிருஷ்டி சக்கரத்தில் ஏற்படக்கூடிய இந்த மகா லீலையை நிர்ணயம் செய்கின்ற புள்ளி (மூலகர்த்தா) எங்கே? சாதாரண மக்களுக்கு இது பற்றிய விவரங்கள் எப்படி, எங்கே கிடைக்கக்கூடும்?

மனிதர்கள் தங்களுடைய மன விருப்பங்களை எடுத்துக் கொண்டு புனித யாத்திரை செய்து பல தலங்களுக்குச் சென்று தீவிர முயற்சி மேற்கொள்கின்றனர். ஆனால் வல்லமைமிக்க விதி (பாக்கியம், அதிர்ஷ்டம்) குறுக்கே நிற்பது கண்களுக்குப் புலப்படுவ தில்லை. மனிதர்கள் தீர்மானிக்கின்ற எண்ணங்கள், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வேறு விதமாக விளைவு மாறுபடுகிறது. சில வேளை களில் வெற்றிக்கான சூத்திரம் தன்வசம் உள்ளது எனத் தோன்றுகிறது. ஆனால் காலப் போக்கில் அந்த சூத்திரம் கை நழுவி எங்கோ சென்று விட்டது. தற்போது தன்னிடம் உள்ளதோ இல்லையோ தெரியவில்லை, அப்போது மனிதன் முகம் சோர்வடைந்து, பொலிவிழந்து வேறு வழியின்றி ஒரு ஓரத்தில் தனிமையில் நின்று கொண்டு இருப்பதாகி விடுகிறது. மனித வாழ்வில் ஒவ்வொரு நொடியிலும், சந்திப்பு-பிரிவு, சாதகம் -பாதகம் இப்படி பல நிகழ்வுகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஒவ்வொரு மனிதனுடைய மனதில் எதிர்பாராது எழும் விரும்பத்தகாத காரியங்களைச் செய்ய ஒப்பவில்லை யெனினும் கூட ஏதாவதொன்று நடந்தேவிடுகிறது. கண் இமை முழுவதும் திறக்கவில்லை அதற்குள் கனவு முடிந்து விடுகிறது. பாவ காரியங்கள் செய்வதை விட்டு விட்டாலுமே கூட, ஒருவர் புண்ணிய காரியங்களை விரும்பி எவ்வளவு நன்மைகளை செய்கின்றாரோ என்பது இறுதியில் எவ்வளவு பாக்கியத்தை அடைகிறார் என்பதை ஒவ்வொரு வருக்கும் தனித்தனியாக அனுபவம் ஏற்படும், அதை மறுக்க முடியாது.

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5
R.No.49463/87




**சென்னை (ஹேப்பி வில்லேஜ்):** போக்குவரத்து துறை, Dialogue நிகழ்ச்சியில் மேடையில் பி.கு. பீனா, பி.கு. திவ்யா பெகன்ஜி (மும்பை) பி.கு. கலாவதி, பி.கு. சுரேஷ், (மதுபன்), பி.கு. கிரிஷ், (மும்பை) உரை நிகழ்த்துபவர் பி.கு. நீலிமா




சென்னை (ஹேப்பி வில்லேஜ்): போக்குவரத்து துறை, Dialogue நிகழ்ச்சியில் குத்துவிளக்கு ஏற்றும் முக்கிய விருந்தினர்கள்



பி.கு. கவிதா (மும்பை)



பி.கு. சுரேஷ், (மதுபன்)



பி.கு. கிரிஷ் (மும்பை)



திரு.மதி S. ஆனந்தி, MD, அடையார் ஆனந்த பவன் குரூப் அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு. திவ்யாஜி



திரு. ஹர் சஹாய் மீனா, IAS ஆய்வாளர், தமிழ்நாடு சுற்றுலா துறை



திரு. N.K. குமார், IES போக்குவரத்து திட்டம், சென்னை மேட்ரோ ரயில்



**சென்னை** Residency Towers ஹோட்டலில் உரை நிகழ்த்துகின்றார் பி.கு. கிரிஷ் (மும்பை)



ICF உயர் அதிகாரிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்ச்சியில் உரை நிகழ்த்துகின்றார் பி.கு. ரகேஷா (மும்பை)



**சென்னை:** அம்பிகா எம்பயர் ஹோட்டலில் உள்ள மேலாண்மை அதிகாரிகளுக்காக நடந்த சிறப்பு பயிற்சியில் கலந்து கொண்டவர்களுடன் பி.கு. ரஞ்சனி



**திருநெல்வேலி (வள்ளியூர்)** 12 ஜோதிர்லிங்க திறப்பு விழாவில் குத்து விளக்கு ஏற்றுகின்றனர் பி.கு. மாலா, பி.கு.அம்பிகா, பி.கு. சீதாதேவி, பி.கு. புவனா மற்றும் முக்கிய பிரமுகர்கள்.

R.No. : 49463/87




திருவண்ணாமலை: கிரிவல பாதையில் பக்தகோடிகளுக்கான சேவைக்காக புதியதாக கட்டப்பட்ட சிவஜோதி தியான ஆலயம்





திறப்பு விழா மேடையில் பி.கு. பீனா, இரஜயோகினி டாக்டர் நிர்மலாஜி, மதுபன், ஜெகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜெயேந்திரபுரி மஹாசுவாமிகள், பி.கு. கலாவதிஜி,. பி.கு. நாகரத்தினாஜி (ஜெய்நகர்- பெங்களூர்) பி.கு. உமா (தி.மலை பொறுப்பு சகோதரி) இறைவணக்கம் பாடுகின்றார் பி.கு. சுவேதா

திறப்பு விழாவில் கலந்து கொண்ட தமிழகத்தை சேர்ந்த பிரம்மா குமாரி சகோதர சகோதரிகள்.